உ

# ரேகா சாஸ்திர ஸுபோதம்





சி. சண்முகநாத சர்மா
எழுதியது.


உரிமை பதிவு செய்யப்பட்டது] [விலை அணா [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. சண்முகநாத சர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் முன்னிற்க

# ரேகாசாஸ்திர லகுபோதம்.

சி. சண்முகநாதசர்மா அவர்கள்
எழுதியது

குமரன் அச்சுயந்திரசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

1936

[உரிமை பதிவுசெய்யப்பட்டது] [விலை அணா 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை.

அகில உலகத்தையும், அதிலுள்ள அசராசர பேதமான அனைத்தையும் வகுத்த கடவுளானவர் சர்வ வல்லமைகளும் பொருந்தியவர். அவருடைய தோற்றமானது உண்மையாகவும், பிரகாசமாகவும், ஆனந்தமயமாகவும் இருக்கின்றது. அவருடைய உண்மைத்தோற்றம் எங்கள் வேத சாஸ்திரத்தில் பிரதிபாதிக்கப்பட் டிருக்கின்றது. இந்த சாஸ்திரம் ஆறு அங்கங்கள் உடையதாய் இருக்கின்றது. அவைகளில் ஒன்று ஜோதிஷம். இந்த உண்மை சாமுத்ரீகா லக்ஷணத்தில் தங்கியிருக்கிறது. ரேகை சாஸ்திரமானது சாமுத்ரீகா லக்ஷணத்தின் ஓர் பிரிவாயுள்ளது, இந்த ரேகாசாஸ்திரத்தை பண்டைநாட்டொட்டே அனுபவத்தில் கொண்டுவந்திருக்கிறதாகத் தெரிகிறது. அதற்குத் திருஷ்டாந்தமாகக் கந்தபுராணத்தில் வள்ளிநாயகிக்குச் சுப்பிரமணியர் (வேடம்பூண்டு) குறிசொன்னதாகவும், பாரதத்தில் அல்லியைத்தேடி அர்ஜுனன் செல்கின்ற சமயத்தில் கிருஷ்ணபரமாத்மா (வேடம்பூண்டு) குறிசொன்னதாகவும் தெரிகிறது. ஆகையால் அனுபவம் வாய்ந்த பூர்வீக சாஸ்திரம் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்பொழுதும் அது அனுபவத்திற்கு ஒத்திருக்கிறது. அப்படிப்பட்ட உண்மையான ரேகாசாஸ்திரத்தையே இங்கு எழுதலாயிற்று. இந்த ரேகாசாஸ்திரத்தைப் படித்தலானது மனம்போன போக்காய் அலைந்து திரியும் இம்மானிட ஜன்மத்திற்கு ஓர் வழிகாட்டியாயிருக்குமென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. ஏனெனில், இம்மானிட ஜன்மமானது பூர்வஜன்மத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட வினைக்கேடாகக் கிரகாதிகளின் ஆகர்ஷணசக்திக்குட்பட்டுப் பல்வகைத் தோற்றத்தோடும், குணங்களோடும் கஷ்ட நஷ்ட சுகதுக்கங்களோடும் ஜனிக்கின்றது. இந்த மானிட வாழ்வின் மர்மங்களையெல்லாம் ரேகாசாஸ்திரம் வெளிப்படுத்துகின்றது. ஆகையால் பாலர் முதல் விருத்தர் வரையுள்ள ஆண்பெண் இருபாலரும் வாங்கிப் படித்தலினால் யாரொருவர் உதவியுமின்றித் தங்கள் வாழ்நாட்களிற் சம்பவிக்கக்கூடிய கஷ்டநஷ்டங்களையு மறிந்து அக்காலங்களில் போதிய மனோபலத்தாலும், தெய்வவழிபாட்டாலும் அவைகளினின்று தப்புவதற்கு இது ஒரு வழிகாட்டியாக விருப்பதுடன், எவர்களைச் சந்தித்தாலும் அவர்களின் குணாதிசயங்களையும் பழக்கவழக்கங்களையும் கையினுடைய லக்ஷணத்தாலும் ரேகையைப் பார்ப்பதினாலும் அறிந்துகொள்ளலாம். இச்சிறு புஸ்தகத்திற்கு முகவுரை அதிகம் வேண்டியதில்லை. முகவுரையானது புஸ்தகத்தின் பிரயோசனத்திலும் நம்பிக்கையிலும் தங்கியிருக்கிறது. அநேகர் கேட்டுக்கொண்டபடி இந்த ரேகாசாஸ்திரத்தின் சுருக்கத்தைப் படித்துப் பயனடையுமாறு மிகவும் எளிய வசன நடையிலே எழுதியிருக்கின்றேன். இச்சிறு புஸ்தகமானது அதனகத்துள்ள பலாபலன்களைப் படித்தறிதலாலும் அவற்றை யனுபவித்தலாலும் பல ஜனங்களின் அங்கீகாரத்தைப் பெறுமென நம்புகிறேன்.

இங்ஙனம்,

யாழ்ப்பாணம்,
5-7-1936

சி. சண்முகநாத சர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் முன்னிற்க.

# ரேகா சாஸ்திர லகுபோதம்.

## முதலாவது பிரிவு.

## ஹஸ்தலக்ஷணம்.

### கைகளின் அமைப்பு.

தற்காலத்திலுள்ள ரேகாசாஸ்திரமானது ஹஸ்தலக்ஷண சாஸ்திரம், ஹஸ்தரேகாசாஸ்திரம், என இரண்டு பிரிவாயுள்ளது.

ஹஸ்தலக்ஷணமாவது கை, கிரகமேடுகள், விரல்கள், நகங்கள், கையின் பின்புறத்திலுள்ள மயிர்கள் முதலியவற்றைத் தெரிவிப்பது.

இவைகளைப் பற்றிப் படிப்பது இந்த ரேகாசாஸ்திரத்துக்கு முக்கியமானதென்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த உறுப்புகளைக் கவனமாகவும், ஒழுங்காகவும், கவனிப்பீர்களானால் மனிதனுடைய பழக்கவழக்கங்களையும் பொதுவான குணநிசயங்களையும் சரிவரத் தெரிந்துகொள்வீர்களென நிச்சயமாக நினைக்கிறேன்.

பிரதிமனிதனின் கைகளும் வெவ்வேறாயிருக்கக்காணலாம். அதில் இவ்வுலகத்திற்குப் பிரயோசனமானது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன:

1. தத்துவஞானக்கை-(தெய்வீக உலகத்தைப்பற்றியது)
2. சதுரக்கை-(நியாயத்தைப்பற்றியது.)
3. சுறுசுறுப்புக்கை-(பொருள்களைப்பற்றியது.)

இவைகளின் வித்தியாசத்தைக் கையை நீட்டிப் பின் பக்கத்தைக்கொண்டே யறியவேண்டும்.

## 1. தத்துவ ஞானக்கை



தத்துவஞானக்கை

(1-வது படம்) தத்துவ ஞானக்கையானது ஒடுங்கி நீண்ட உள்ளங்கையும், நீண்ட விரல்களும், நீண்ட நகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் உடையதாய் இரண்டு முடிச்சுகளும் பெருத்துக் கலா ஞானத்தை வெளிப்படையாய்க் காட்டுகிறதாயிருக்கும்.

## இக் கையுடையவர்களின் குணங்கள்.

உண்மை, பொறுமை, சாந்தம், தன்னடக்கம், தெய்வீக உணர்ச்சி, வித்தையில் விருப்பம், தனித்திருக்க விருப்பம், ஞானத்தில் ஆவல், அதிக ஆலோசனை, இவைகளையுடையவர்களாக விருப்பார்கள்.

## இக் கையுடையவர்களின் தொழில்கள்

மோக்ஷத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்பவர்களாயும் பத்திரிகைகளுக்கு விஷய மெழுதுபவர்களாயும், வைத்தியர்களாயும், கணக்கப்பிள்ளைகளாயும், தத்துவ சாஸ்திரம், மனோவசிய சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், இவற்றை ஆராய்ச்சி செய்பவர்களாயும், எழுதுபவர்களாயும் இருப்பார்கள். சில சமயங்களில் வியாபாரிகளாகவுமிருப்பார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சதுரக்கை



(2-வது படம்) சதுரக்கையானது மணிக்கட்டுக்குச் சமீபமாகச் சதுரமாகவும், விரல்களின் அடியிலும் நுனியிலும், சதுரமாயுமிருக்கும்.

### இக் கையுடையவர்களின் குணங்கள்

நியாயநெறி தவறாதவர்கள், சமயோசித புத்தியுடையவர்கள், கீழ்ப்படிதலான குணமுடையவர்கள், ஊக்கமுடையவர்கள், சமாதானத்தை விரும்புகிறவர்கள், உண்மையான அன்பு உடையவர்களாயும் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கையுடையவர்களின் தொழில்கள்,

நான் இந்த விதமான கைகளையுடையவர்களை விவசாயத்திலும், வியாபாரத்திலும், பலவித கைத்தொழிற்சாலைகளிலும், உத்தியோகங்களிலும் பார்த்திருக்கின்றேன்.

3. சுறுசுறுப்புக்கை



(3-வது படம்) சுறுசுறுப்புக்கையானது அகலமுள்ளதாகவும், விரல்கள் நெருங்கியதாகவும், விரல்களின் நுனி கூர்மையற்றதாகவும், நகம் சதைக்குள் அமிழ்ந்தியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் இருக்கும். கைகளின் வித்தியாசங்களைப் படங்களை நன்றாகக் கவனித்தால் விளங்கும்.

## இக் கையுடையவர்களின் குணங்கள்.

ஊக்கமுள்ளவர்கள், சுயேச்சையாய் இருக்க விருப்பமுள்ளவர்கள், மதக்கோட்பாடுகளை நம்பாதவர்கள், நுட்பமான யோசனையுடையவர்கள், நாகரீகத்தை விருத்தி செய்பவர்களுமாவார்கள்.

## இக் கையுடையவர்களின் தொழில்கள்.

இஞ்சினீயர்கள், கப்பலோட்டிகள், படம் பிடிப்பவர்கள், புதிதுபுதிதான சாமான்களைக் கண்டுபிடிப்பவர்கள், உண்டாக்குபவர்கள், யந்திரங்களில் வேலை செய்பவர்களுமாவார்கள். இவர்களை வியாபாரம் முதலிய ஏனைய தொழில்களிலும் சிலசமயம் பார்த்திருக்கின்றேன்.

இந்த மூன்று பிரிவான கைகளையும் விட இன்னும் நான்கு வகையான கைகளுண்டு.

அவையாவன:—

4. சாமானிய கை
5. கூர்மையான கை
6. துர் அதிஷ்டக்கை
7. கலப்புக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சாமானிய கை



(4-வது படம்) சாமானிய கையானது அவலக்ஷண முடையதாகவும், கடினமாகவும், பாரமுடையதாகவும், உள்ளங்கை விரல்களைக் காட்டிலும் நீளமுடையதாகவும், விரல்கள் குறுகியும், சிறு நகங்களோடு விகாரமாயும் இருக்கும்.

### இக் கையுடையவர்களின் குணங்கள்

விவேகமில்லாதவர்கள், படிப்பில்லாதவர்கள், சிற்றின்ப ஆசையுடையவர்கள், பெருந் தீனி தின்பவர்கள், மூடநம்பிக்கை யுடையவர்கள், பரலோகத்தைப் பற்றிய சிந்தனையில்லாதவர்களு மாவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இக்கையுடையவர்களின் தொழில்கள்.

தோட்டங்கள், தெருக்கள், புகைதவீதிகள், முதலிய வற்றில் கூலியாளர்களாகவும், விவசாயிகளாகவும், பார்த்திருக்கின்றேன். ரேகை அதிகமிராது. அனேகமாக முரட்டுச்சுபாவமுடையவர்களாயும், தேகத்தினுல் உழைப்பவர்களாயும் இருப்பார்கள்.

## 5. கூர்மையான கை



கூர்மையான கை

(5-வது படம்) கூர்மையான கையானது அடிப்பாகம் அகலமாகவும், விரல்களின் மூன்ருவது அங்குலாஸ்திகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலமாகவும், நுனி கூர்மையாகவும் இருக்கும். இந்தக் கையானது அடியிலிருந்து சிறிது சிறிதாய்க் குறைந்து பூமொட்டைப்போல் குவிந்த வடிவுடையதாயும், மென்மையாயும் இருக்கும். உள்ளங்கையும் கிரகமேடுகளும் சாதாரணமாக உன்னதமாயிருக்கும்.

## இக் கையுடையவர்களின் குணங்கள்

பரோபகாரிகள், சங்கீதப் பிரியர்கள், கலா ஞான சக்தியுடையவர்கள், முற்கோபிகள், சித்திரவேலை செய்பவர்கள், பொறுமையற்றவர்கள், அழுத்தமான நேசமுடையவர்கள், சோம்பற்றனம், சுகத்தில் விருப்பம், புதிதுபுதிதான அலங்காரப்பிரியம், ஆகியவைகளை யுடையவர்களாயிருப்பார்கள்.

## இக் கையுடையவர்களின் தொழில்கள்.

நூலாசிரியர்களாகவும், பத்திரிகாசிரியர்களாகவும், சித்திரவேலை செய்பவர்களாகவும், நல்ல விசித்திர நடிகர்களாயும், பிரசங்கிகளாயும், சங்கீத ஆசிரியர்களாயும், பெண்களாயினும் ஆண்களாயினும் கலாஞான புத்தியுடையவர்களாயும் இருப்பார்கள். எவ்வகையேனும் இப்படியான கையையுடையவர்கள் இந்த உலகத்தில் மிகவும் பிரயோசனமுடையவர்களாக விருக்கிறார்கள். சில சமயங்களில் இப்படியான கையையுடைவர்களை உத்தியோகஸ்தர்களாயும், முதலாளிகளாயும் பார்த்திருக்கின்றேன்.

## 6. தூர் அதிஷ்டக்கை



தூர் அதிஷ்டக்கை

(6-வது படம்) தூர் அதிஷ்டக்கையானது மிருதுவாயும், பலமில்லாமலும், சாய்ந்து நீண்ட விரல்களோடு நீண்டபெருவிரலும், அழகிய மிருதுவாகிய உள்ளங்கையும், நகம் நீளமாகவும் இருக்கும். அதனையுடையவர்கள் எப்பொழுதும் கம்பிபோல் மெலிந்திருப்பார்கள். இவர்களைக் காண்பது அபூர்வம். ஆயினும் சிலரைப் பார்த்திருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இக் கையுடையவர்களின் குணங்கள்

சாந்தம், பொறுமை, ஆத்மவிசாரம், அழகில் விருப்பம், இல்லறத்தை விட்டுத் துறவறத்தில் விருப்பம், எந்த வகையான வேலையும் செய்ய முடியாமை, மனோசஞ்சலம் பணத்தில் ஆசையில்லாமை, இயற்கை அறிவுடைமை, சதா துக்கம், இவற்றைக் குறிக்கும். இக்கையையுடையோர் இயற்கையிலேயே ஞானிகளாகவிருப்பார்கள். இக் கையுடையவர்கள் சில சமயம் சாஸ்திர ஆராய்ச்சியாளராகவும், ஜோதிஷராகவும், யோகிகளாகவும் இருப்பார்கள். நித்தியகர்மானுஷ்டான முடையவர்களும், மதப்பற்றுடையவர்களுமாவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கலப்புக்கை



கலப்புக் கை

(7-வது படம்) கலப்புக்கையானது மேலே கூறியுள்ள கைகளின் பலவகைக் கலப்பினை யுடையதாயிருக்கும். இக்தக்கை மற்றக் கைகளுடன் எவ்விதத்திலும் சேராது. சிலசமயம் உள்ளங்கை சதுரமாயிருந்தாலும், விரல்களானவை பலவித கலப்புடையதாயிருக்கும். அதாவது ஒன்று கூர்மையாகவும், ஒன்று சதுரமாகவும் சிலசமயம் இரண்டு மொருவிதமாகவும், இருக்கும்.

### இக் கையுடையவர்களின் குணங்கள்

உறுதியில்லாதவர்கள், சமயோசித புத்தியுடையவர்கள், முடிவில்லாதவர்கள், நிலையற்றவர்களுமாவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இக் கையுடையவர்களின் தொழில்கள்

இவர்களை எல்லா வேலைகளிலும் பார்க்கலாம். ஆனால் பலமான புத்திரேகை யிருந்தால் தான் நிலையாக இருப்பார்கள்.

### விசேஷக் குறிப்பு.

பலவகைக்கலப்பினால் சிலசமயம் மேலே கூறியுள்ள கைகளின் விரல்கள் வித்தியாசப்படும். உதாரணமாக, சதுரக் கையில் கூர்மையான விரல்கள், சுறுசுறுப்புள்ள கையைச்சேர்ந்த விரல்கள் இவைபோன்ற கலப்புகள் காணப்படும். இவற்றையெல்லாம் நுட்பமாய் நோக்கிக் குண விகற்பங்களை யறிந்துகொள்ளவேண்டும்.

---

இரண்டாவது பிரிவு.

## உள்ளங்கையும், விரல்களும்.

உள்ளங்கையானது உலகப்பொருள்களிலுள்ள இயற்கையான விருப்பத்தையும், விரல்களானவை மனதையும் குறிப்பிடுகின்றன.

ஆகையினால் சமமாக அவைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மனதானது இயற்கை விருப்பத்திற்கு வழிகாட்டியாயிருக்கின்றது.

உள்ளங்கையினுடைய நீளத்தைக் கவனிக்காது விரல்கள் நீண்டும் குறுகியும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுகிய விரல்கள்.

விரல்கள் குறுகியும், கனமாகவும், இருந்தால் உலகப்பொருள்களில் அதிக ஆசையுடையவர்களாயும், விஷயங்களைப் பிரித்தறியும் சக்தியற்றவர்களாயும், எவற்றையும் பிரித்தறியாது மனதில் தோற்றியபடி சீக்கிர ஆலோசனை, சீக்கிரமுடிவு, சீக்கிரபேச்சுடையவர்களாயும், மற்றவர்கள் செலுத்தச் செல்பவர்களாயும், உடைகளைக் கவனியாதவர்களாயும், இருப்பார்கள். இவர்கள் முன்பின் யோசனையின்றி எவ்விஷயத்திலும் ஈடுபடுவதுடன் எல்லாவற்றையும் பொதுவாகக் கவனித்தலினால் எல்லாம் அவர்களுக்கு நல்லனவே. மேல்நோக்கங்கிடையாது.

## நீண்ட விரல்கள்

ஒவ்வொரு விஷயத்தையும் விரிவாகத் தெரிவதற்கு விரும்புகிறவர்களும், அதிக ஆலோசனையுடையவர்களும், மனக்கவலை யுடையவர்களும், சிறு விஷயத்தையும் பெரிதாய்க் கவனித்து அதினால் சங்கடப்படுபவர்களும், சில சமயத்தில் வஞ்சகம், பொறாமை, ஆழ்ந்த அன்பு, இவைகளை உடையவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் தான் பிரசங்கிகளும், தர்க்க வாதஞ் செய்பவர்களுமாக இருப்பார்கள்.

விரல்கள் குறுகியும், விகாரமாயும் கடினமாயுமிருந்தால் கையால் தொழில் செய்வதையும், தன்னலம், குரூரஎண்ணம் உள்ளவர்கள் என்பதையுங் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களின் மூன்ருவது அங்குலாஸ்திதி சதை பிடித்துப் பெரிதாயிருந்தால் பொருமை, அதிகவுண்டி, குடி, அதிக ஆசை, இவைகளைக் குறிக்கும்.

விரல்களின் அடி சிறுத்திருந்தால் லேசான ஆகாரத்தில் விருப்பமும், அற்ப புத்தியில்லாதவர்களும், சுத்தமான ஆடையை விரும்புகிறவர்களுமாக விருப்பார்கள்.

விரல்கள் உட்பக்கமாகச் சற்று வளைந்திருந்தால் பேராசை தன் காரியத்தில் ஜாக்கிரதை, பொறுமை, பயந்த தன்மை, இவைகளைக் குறிக்கும்.

விரல்கள் பின்பக்கமாக வளைந்திருந்தால் மற்றவர்களுடன் சேர்ந்து வாழ விருப்பமுடையவர்ளும், அதிக புத்திசாலிகளாயுமிருப்பார்கள். ஆனல் பொருளையும், புத்தியையும், வீண்செலவு செய்துவிடுவார்கள்.

முதலாவது அங்குலாஸ்திதிகளில் உட்பக்கமாகப் பந்துபோல் சதை பிடித்திருந்தால் அதிக ரோசமுள்ள தன்மையைக் குறிக்கும்.

அழகில்லாத முறுகிய விரல்கள் புத்திக் குறைவையும், கொடூர சிந்தையையுங் குறிக்கும்.

விரல்கள் மூன்று அங்குலாஸ்திதிகளாகக் குறுக்கே கோடுகளால் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

நகமுள்ள பாகம் முதல் அங்குலாஸ்திதியாகவும், மற்றது இரண்டாவது அங்குலாஸ்திதியாகவும், கடைசி மூன்ருவது அங்குலாஸ்திதியாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் அங்குலாஸ்திநி, நீளமாயிருந்தால் தெய்வீக உணர்ச்சியையும், சக்தியையும், சுபாவமான யோக்கியத்தையும் குறிக்கும்.

இரண்டாவது அங்குலாஸ்திதி நீளமாயிருந்தால் தீர்க்காலோசனையும், தர்க்கவாதமும், அதிகமாயிருக்கு மென்பதைக் குறிக்கும்.

மூன்றாவது அங்குலாஸ்திதி நீளமாயிருந்தால் இகலோகவின்பத்திலும், சிற்றின்பத்திலும் அதிக ஆசையுடையவர்களாக விருப்பார்கள்.

மூன்றாவது அங்குலாஸ்திதி குறுகியும், இடைபோல் சிறுத்துமிருந்தால், விவேகபுத்தி யுள்ளவர்களும், உலகவாஞ்சைகளில் விருப்பமற்றவர்களுமாக விருப்பார்கள். எந்த அங்குலாஸ்திதி நீண்டிருக்கிறதோ அதைக்கொண்டு தான் குணகுணங்களை நிர்ணயிக்கவேண்டும்.

## குழி

உள்ளங்கையில் குழியிருந்தால் பணம் சம்பாதிப்பதிலுள்ள பல கஷ்டங்களையும், பொருள் விரயத்தையும் தெரிவிக்கின்றது. இந்தக் குழி எந்த ரேகையைச் சார்ந்திருக்கிறதோ அதன் குணத்தைக் கீழே சொல்லுகின்றேன்.

ஆயுள்ரேகையி லிருந்தால், குடும்பத் தொந்தரவையும், விதிரேகையிலிருந்தால் தொழிலில் சங்கடத்தையும் புத்திரேகையிலிருந்தால் புத்தி தடுமாற்றத்தையும், இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபரேகையி விருந்தால் தேசத்திலுள்ள தொந்தரவுகளை யுங் குறிக்கும்.

விரல்கள் ஒன்றோடொன்று சார்ந்திருந்தால் சில குணங்களைத் தெரிவிக்கின்றேன். கையைத் திறந்து வைத்துக்கொள்ளும்போது மற்ற மூன்று விரல்களும் முதல் விரல் பக்கஞ் சார்ந்திருந்தால் அதிகாரப்பிரியர்களும், அதற்குரிய செல்வாக் குடையவர்களுமாக விருப்பார்கள்.

இரண்டாது விரல்ப் பக்கமாக மற்றைய விரல்கள் சார்ந்திருந்தால் விதியை நம்பியிருப்பவர்களும், மனச் சோர்வுடையவர்களும், வியாகுல முடையவர்களுமாக விருப்பார்கள்.

இரண்டாவது விரல் மூன்றாவது விரல்ப் பக்கமாகச் சார்ந்திருந்தால் க்ஷணசிந்தை யுடையவர்களாக விருப்பார்கள்.

மூன்றாவது விரல் இரண்டாவது விரல்ப் பக்கமாகச் சார்ந்திருந்தால் கீர்த்திபெற மந்தமான அபேட்சையுடையவர்களாக விருப்பார்கள்.

மூன்றாவது விரல் நான்காவது விரல்ப் பக்கமாகச் சார்ந்திருந்தால் கலாஞானத்திலும் வியாபாரத்திலும்விருப்பத்தைக் குறிக்கும்.

நான்காவது விரல் மூன்றாவது விரல்ப் பக்கமாகச்சார்ந்திருந்தால்கலாஞானத்திலுள்ள உற்சாகத்தைக்குறிக்கும்

பொதுவாக எல்லா விரல்களும் சாயாது நேராகவும் நீண்டுமிருப்பது உத்தமம். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரல்களுக்கு இடையிலுள்ள இடங்கள்

பெருவிரலுக்கும் முதல் விரலுக்குமிடையில் இடம் அதிகமாயிருந்தால் அடக்க முடியாத கோபமுடையவர்களும், போராடுபவர்களுமாகவிருப்பார்கள,

முதல் விரலுக்கும் இரண்டாவது விரலுக்கும் நடுவில் அதிக இடமிருந்தால் சுயேச்சையான புத்தியைக்குறிக்கும்

இரண்டாவது விரலுக்கும் மூன்றாவது விரலுக்கு மிடையில் வெளியிருந்தால் சந்தர்ப்பங்களைக் கவனியாது தன்னிஷ்டப்படி நடப்பார்கள்.

மூன்றாவது விரலுக்கும் நான்காவது விரலுக்குமிடையில் வெளியிருந்தால் மற்றவர்களைக் கவனியாது சுதந்தர வேலையைக் குறிக்கும்.

## முதல் விரல்

விரல்கள் சிலசமயம் இருக்கவேண்டிய விதிக்கு மாறாக நீண்டும் குறுகியுமிருக்கும். அதற்கேற்றவாறு குணங்களும் வித்தியாசப்படும்.

முதல் விரல் நீண்டிருந்தால்: அதிகார ஆசை, கர்வம், சனங்களை யடக்கியாளுஞ் சக்தி, இவைகளையும், குறுகியிருந்தால்அகம்பாவமின்மை, சட்டத்துக்குக்கீழ்ப்படியாமை இவைகளையும், கோணலாயிருந்தால் சட்டங்களைக் கவனியாமையும், மரியாதை யில்லாமையுமுண்டு.

விரல்நுனிகூர்மையாயிருந்தால் மதப்பற்றையும், சதுரமாயிருந்தால் ஆராய்ச்சிசெய்யுந்தன்மையையும், சுறுசுறுப்புக் கையைச் சேர்ந்ததானால் மனோதான்மத்தத்தையும்குறிக்கும்

முதலாவது அங்குலாஸ்திதி நீளமாயிருந்தால் திருவருளையும், இரண்டாவது அங்குலாஸ்திதிநீளமானால்அதிகாரப்பிரியத்தையும், மூன்றாவது அங்குலாஸ்திதிநீளமானால் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலையுங் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது விரல்

நீண்டிருந்தால் சஞ்சலபுத்தி, அற்பத்தன்மை, நோய், இவைகளையும், குட்டையாயிருந்தால் இவற்றிற்கு மாறான குணங்களையும் வளைந்திருந்தால் துஷ்டபுத்தி, தர்க்குணம், ஆகியவைகளைக் குறிக்கும். விரல்நுனி சதுரமாயிருந்தால் விசாரகுணம், சதுரசுறுப்புக்கையைச் சேர்ந்ததானால் நோயின்தன்மை, துக்கவிசாரம், கூர்மையாயிருந்தால் தன்னலம் ஆகியவைகளைக் குறிக்கும்.

முதல் அங்குலாஸ்திதி நீண்டிருந்தால் மூடபக்தியும் இரண்டாவது அங்குலாஸ்திதி நீளமானால் செய்தொழிலில் ஆசையும், சித்தியும், மூன்றாவது அங்குலாஸ்திதி, நீளமானால் சுயநலம், பேராசை, ஆகியவைகளைக் குறிக்கும்.

## மூன்றாவது விரல்

நீண்டிருந்தால் சித்திர வேலையில் விருப்பத்தையும் மிகவும் நீண்டிருந்தால் சூதாட்டத்தில் விருப்பத்தையும், குட்டையாயிருந்தால் கீர்த்தியில் விருப்பமில்லாமையையும், வளைந்திருந்தால் யோக்கியதையில்லாமையையுங் குறிக்கும். விரல்நுனி கூர்மையாயிருந்தால் சமயோசிதபுத்தியும், சதுரமாயிருந்தால் சித்திரவேலையில் விருப்பத்தையும், சதுரசுறுப்புக்கையைச் சேர்ந்ததானால் சித்திரவேலையில் மகிழ்ச்சியையுங்குறிக்கும்.

முதலாவது அங்குலாஸ்திதி நீண்டிருந்தால் சித்திர வேலையில் ஆசையும் இரண்டாவது அங்குலாஸ்திதி நீளமானால் தீர்க்காலோசனை, கைத்தொழில் விருப்பம், இவைகளையும், மூன்றாவது அங்குலாஸ்திதி நீளமானால் சித்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைசெய்தல் அல்லது சித்திரச்சாமான் வியாபாரம், ஆகியவைகளைக் குறிக்கும்.

## நான்காவது விரல்

நீண்டிருந்தால் கலாஞான முதிர்ச்சி, வாக்குச் சாதுர்யம், ஆராய்ச்சி, ஆகியவைகளையும், குறுகியிருந்தால் விஷயங்களில் சீக்கிரபுத்தியையும், கோணலாயிருந்தால் பொய்யையும், சுயநலம் கருதுவதையும் குறிக்கும்.

விரல்நுனி கூர்மையாயிருந்தால் வித்தையில் விருப்பத்தையும், சதுரமாயிருந்தால் கலாஞானம்,சோதிடம், ரேகாசாஸ்திரம், முதலிய தனக்குத் தெரிந்தவற்றைப் பகிரங்கப்படுத்துவதையும், சுறுசுறுப்புக்கையைச் சேர்ந்திருந்தால் கலாஞானம், இயக்குஞ்சக்தி, வாக்குச்சாதுர்யம், வீரத்தோடு பேசுதல், ஆகியவைகளைக் குறிக்கும்.

முதல் அங்குலாஸ்திதி நீளமாயிருந்தால் சாஸ்திர ஆராய்ச்சி, தீவிர சிந்தை, ஆகியவைகளையும், இரண்டாவது அங்குலாஸ்திதி நீளமாயிருந்தால் வியாபாரத்தில் திறமைவாய்ந்த புத்தியையும், மூன்றாவது அங்குலாஸ்திதி நீளமாயிருந்தால் நுண்ணிய அறிவையும், வியாபார சாதனையையும் குறிக்கும். நாலாவது விரல் நீளமாகச் செம்மங்குடி, ஸ்ரீ நிவாசன் கையிலும் இன்னும் சிலர் கையிலும் பார்த்திருக்கிறேன். இவர்கள் சாதாரணமாகக் கலாஞானிகளாகவே யிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது பிரிவு.

# முடிச்சுகள்.

முடிச்சுகளாவன: முதலாவது இரண்டாவது அங்குலாஸ்திதிகளையும் இரண்டாவது மூன்றாவது அங்குலாஸ்திதிகளையும் இணைத்துக் கொண்டிருப்பதற்கு முடிச்சு என்று பெயர்.

இந்த முடிச்சுகள் ஜடமுடிச்சு, தத்துவஞானமுடிச்சு, என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை 8-வது படத்தில் கவனிக்கவும்.

இரண்டாவது மூன்றாவது அங்குலாஸ்திதிகளை இணைத்துகொண்டிருக்கிற ஜடமுடிச்சு வெளிப்படையாய்த் தோற்றினால் உலகப் பொருள்களில் ஒழுங்கு முறைமையைக் குறிக்கும்.

முதலாவது, இரண்டாவது அங்குலாஸ்திதிகளை இணைத்துக்கொண்டிருக்கிற தத்துவஞான முடிச்சு வெளிப்படையாய்த் தோற்றினால் மனிதனுடைய ஆலோசனையையும், பிரமாணத்தையும் குறிக்கும்.

இரண்டு முடிச்சுகளும் வெளிப்படையாய்த் தோற்றினால் நியாயத்திலும், கணக்கிலும், ஆலோசனையின்படி செய்வதில் தீரர்களும், தங்கள் உடைகள், பொருட்கள் முதலியவற்றில் கவனம், இவர்கள் கல்வி சம்பந்தமான சாஸ்திர சம்பந்தமான தொழில்களில் ஜெயமடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக நீண்ட விரல்களிலே தான் முடிச்சுகள் வெளிப்படையாகத் தென்படுகின்றன. பொதுவாக மனசினால் வேலைசெய்பவர்களுக்கு முடிச்சுகள் வெளிப்படையாய்த் தோற்றியும், உடம்பால் உழைப்பவர்களுக்குத் தோற்றமலுமிருக்கும்.

முடிச்சில்லாத விரல்களையுடையோர் சாதாரணமாக முயற்சியும், சுய அறிவுமுடையவர்களாக விருப்பார்கள். எண்ணங்கள் சாதாரணமாகவேயிருக்கும்.

---

## நான்காவது பிரிவு.

## பெருவிரலும் அதன் முடிச்சுகளும்

பெருவிரலைப்பற்றி ஆராய்ச்சிசெய்வது ரேகாசாஸ்திரத்திற்கு முக்கியமானது. பெருவிரலை ஆத்மசக்தி, தெய்வீகசக்தி, இவை பொருந்தியதென்றுகருதுகிறார்கள்.

சாமுத்ரீகா சாஸ்திரத்தில் பெருவிரலை விசேஷமாகக் குறிப்பிட்டிருக்கிறது. சீனர்கள் தெய்வீகமானதென்று பெருவிரலையும் அதில் உள்ள ரேகைகளையும் நன்கு கவனிக்கிறார்கள்.

பெருவிரலின் ரேகைகளானவை பிரதிமனிதருக்கும் வித்தியாசமாயிருக்கக் காணலாம். ஆகையினால் தான் அரசாங்கங்களில் எழுதத் தெரியாதவர்களுக்கும், குற்றவாளிகளுக்கும், பெருவிரல் ரேகையை மையில் அப்பிப் படமெடுத்துக் கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரலுக்கும் மூளைக்கும் அதிக சம்பந்தமிருக்கிறது. இதனால் தான் சுதேச வைத்தியர்கள் பெருவிரல் பக்கமாக மணிக்கட்டோரத்தில் கையை வைத்துப்பார்த்துத் தேகதத்துவத்தை யறிகிறார்கள்.

ஒருவன் இறக்கிற சமயத்தில் பெருவிரல் தானே தொங்கிவிடும். கிரகமேடுகளும் உள்ளே அமிழ்ந்திப்போகும். பெருவிரலை மற்ற விரல்களால் மூடிக்கொள்வான்.

முன்னோர்கள் பெருவிரலை மூடிக் கொண்டிருப்பவனுக்கு தேகமும் புத்தியும், சக்தி குறைந்திருக்குமென்றும், வஞ்சகக்குணம் நிறைந்திருக்குமென்றும், சொல்கிறார்கள்.

ஆகையினால் பெருவிரலை ஆராய்ச்சிசெய்வது முக்கியமானது. பெருவிரலானது ஒவ்வொரு மனிதனின் மனோசக்தி, நியாயம், ஆசை, இவைகளை வெளிப்படையாய்க் காட்டுகின்றன.

நீண்ட பெருவிரலையுடையவர்கள் தங்களுடையமூளையினால் நியாயாநியாயங்களை யறிந்து எதைப் பேசினாலும் எதைச் செய்தாலும் தீர்க்காலோசனையுடன் செய்வார்கள். இவர்கள் கணிதசாஸ்திரம், ஜோதிஷ சாஸ்திரம், வைத்தியசாஸ்திரங்களில் தீரர்களாகவிருப்பார்கள்.

குறுகிய விரலையுடையவர்கள், ஆலோசனையற்றவர்களும், பொறுமையற்றவர்களும், மிருகசுபாவமுடையவர்களுமாக விருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரல் குறுகக் குறுகப் புத்தி குறைந்துகொண்டேபோகும். சில பைத்தியகாரர்களுக்குப் பெருவிரல் மிகவுங் குறுகியிருக்கும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் பெருவிரல் நீளமாகவும் பலமாகவும் நேராகவும் இருக்கவேண்டும். பெருவிரல் எவ்வளவு நீளமோ அவ்வளவு புத்தியைக் குறிக்கும்.

பெருவிரல் பின்பக்கமாக வளைந்தால் தயை, தாக்ஷிணியம், பரோபகாரசிந்தை, சமயோசித புத்தி, ஆகியவைகளைக் குறிக்கும். ஆனால் புத்தியையும், பணத்தையும் வீண்செலவு செய்பவர்களும், ஜாக்கிரதையற்றவர்களும், எப்பொழுதும் எல்லோரிடத்திலும் விருப்பமும், நேசமுமுடையவர்களு மாகவிருப்பார்கள்.

பெருவிரல் பின்பக்கமாக வளையாதிருந்தால் ஜாக்கிரதையுள்ளவர்களும், பிடிவாதமுள்ளவர்களும், எடுத்துக் கொண்ட காரியத்தை முடிப்பவர்களும், ஐயமடையவர்களும், மௌனமான பேச்சும், செய்கையும், உடையவர்களும், எல்லோருடனும் சேராதவர்களும், தேச முன்னேற்றத்திற்காக உழைப்பவர்களுமாக விருப்பார்கள்.

பெருவிரல் மூன்று அங்குலாஸ்திதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை முறையே முதலாவது நகமுள்ள அங்குலாஸ்திதி மனோசக்தியையும், இரண்டாவது அங்குலாஸ்திதி நியாயத்தையும், மூன்ருவது அங்குலாஸ்திதி, ஆசையையும் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரலின் முதல் அங்குலாஸ்திதி நீண்டிருந்தால் மனோசக்தியையும், அதிகம் நீண்டிருந்தால் தன்னிஷ்டம் போல் நடப்பதையும், கொடுங்கோன்மையையுங் குறிக்கும்.

முதல் அங்குலாஸ்திதி குறுகியிருந்தால், எல்லாவற்றிலும் சந்தேகக்குணமும். தீர்மான மின்மையையும் காட்டும். இதனையுடையவர்கள் எப்பொழுதும் மனக்கோட்டை கட்டுபவர்களாயும், (அதாவது வீண்எண்ணம்) தன்னம்பிக்கையற்றவர்களாயும், சக்திவாய்ந்த மற்றவர்கள் செலுத்தச் செல்பவர்களாயுமிருப்பார்கள்.

இரண்டாவது அங்குலாஸ்திதி நீளமாயிருந்தால் நல்ல ஆலோசனைசக்தியுடையவர்களும் நியாயாநியாயங்களை யுணர்பவர்களும், சதா ஆலோசனை யுடையவர்களும் வீணெண்ணத்தினால் கஷ்டப்படுபவர்களும், விருப்பம்போல் நடக்கச் சக்தியற்றவர்களுமாவார்கள்,

தடித்து இருந்தால் மாத்திரம் நியாயதர்க்கத்தையும், தர்க்கசக்தியையும் குறிக்கும். குறுகியிருந்தால் இதற்கு எதிரான குணங்களையும், மனம்போல் நடத்தலையுங் குறிக்கும். இரண்டாவது அங்குலாஸ்திதி, குறுகி முதல் அங்குலாஸ்திதி நீண்டு இருந்தால் சுக்கான் இல்லாத மரக்கலம் போல் மனம்போன போக்காய் நடந்து பல கஷ்டங்களுக்காளாவார்கள். மனதில் உள்ளதை வெளிப்படையாய்ச் சொல்வார்கள்.

இரண்டாவது அங்குலாஸ்திதி ஒடுக்கமாகவும், மெல்லியதாகவும் இருந்தால் சாமார்த்தியத் தன்மையையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயோசிதபுத்தியையும், விசாலமான மனசையும் காட்டும். இரண்டாவது அங்குலாஸ்திதி தடித்தும் பெருத்துமிருந்தால் சமயோசித புத்தியின்மையால் எவ்விஷயத்தையும் கஷ்டப்பட்டுச் செய்வார்கள்.

பெருவிரல் முதல் அங்குலாஸ்திதி அகலமாயும், கடினமாயும், பந்துபோல் உருண்டை வடிவாயிருந்தால் அதிக காமாதுரர்களாகவும், துர்க்குணத்துக்குரிய கோபசிந்தையுடையவர்களாயுமிருப்பார்கள்.

பெருவிரல் முதல் அங்குலாஸ்திதி பரந்து சப்பையாக இருக்கும் பக்ஷத்தில் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவர்களும், சாந்தகுணமுடையவர்களுமாவார்கள். மூன்றாவது அங்குலாஸ்திதி, ஆசையைக் காட்டிக்கொண்டு கிரகமேட்டைச் சேர்ந்ததாயிருக்கிறது. இதனை மேடுகளைப்பற்றிச் சொல்லும்பொழுது விளக்குவாம்.

ஐந்தாவது பிரிவு.

## நகங்கள்.

நகங்கள் ஒருவருடைய மனப்பான்மை, சுபாவம் ஆகியவற்றைத் தெரிவிப்பதுடன் வியாதிகளையும் குறிப்பிடுகின்றது. ஆகவே அதைப்பற்றி யறியவேண்டியது முக்கியமானது.

நகங்களானவை நீண்ட நகம், குட்டை நகம், அகல நகம், என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்ட நகங்கள்

கூர்மையான புத்தி, தீர்க்காலோசனை, எவற்றிலும் பிழைகளைக்கவனியாமை, சாந்தம், பொறுமை ஆகியவற்றைக்கொடுக்கும்.

வியாதியாவன: நெஞ்சுநோய், சுவாசத்தைப்பற்றியவை, இருமல், சொய்வு முதலியவற்றைக் கொடுக்கும். ஆனல் நகநுனி உள்வளைந்து அகலமாயிருந்தால் நிச்சயமாய்க்குறிப்பிடலாம்.

## குறுகிய நகங்கள்

முற்கோபம், கற்பனைசக்திக்குறைவு, சீக்கிரமுடிவு, பிழைகளைக் கவனித்தல், பிடிவாதம், பரிகாசம் ஆகியவற்றைக் கொடுக்கும்.

வியாதியாவன: இருதயசம்பந்தமானவை, இரத்தோட்டக்குறைவு, ஆகியவைகளைக் கொடுக்கும்.

## அகலமான நகங்கள்

நகங்கள் நீளத்தைக் காட்டிலும் அகலமாயிருந்தால் சண்டைக்குணம், பிடிவாதம், எதிர்ப்பில் பிரியம், நம்பிக்கையின்மை, ஆகியவைகளைக் கொடுக்கும்.

வியாதியாவன:- இருதய சம்பந்தமானவை. குறுகிய நகங்கள் தோலுடன் ஒட்டி அடியில் பரந்து இருக்கும்பக்ஷத்தில் நரம்பு வியாதியைக் காட்டும்.

நகங்குறுகி வெளுத்துப் பொடிப்பொடியாய்ப்போகும் பக்ஷத்தில் பக்கவாதத்தைக் காட்டும். நகம் நீளமாக மேடைந்து இருக்கும் பக்ஷத்தில் முதுகுநோயையும், பலவீனத்தையும் காட்டும். நகம் வட்டமாயிருந்தால் கோபக்குணத்தைக் குறிக்கும், ஆனல் சீக்கிரம் சாந்தமடைந்து விடுவார்கள். நகத்தில் வரைகளிருந்தால் அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும், நகத்தைச் சிலர் கடிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாயிருக்கிறது. இது ஒரு கெட்ட வழக்கம். அவர்களுக்கு நரம்புத்தளர்ச்சியும், பதட்டமும் மனோதிடமின்மையுமிருக்கும்.

நகங்கள் பலவர்ண முடையனவாயிருக்கும். மஞ்சள் நிறமாயிருந்தால் பித்தத்தையும், சிவப்பு நிறமாயிருந்தால் அதிக ரத்தோட்டத்தையும், வெண்மையாயிருந்தால் இரத்தக் குறைவையும், மங்கலாயிருந்தால் வியாதியையும், நல்ல ரோஸ் நிறமாயிருந்தால் தேக திடத்தையும் குறிக்கும்.

நகங்களில் அடிக்கடி வெண்மை, மஞ்சள், கறுப்புப்புள்ளிகள் காணப்படுகின்றன. மஞ்சள் கறுப்புப் புள்ளிகள் கஷ்டத்தையும், வெள்ளைப் புள்ளிகள் அதிஷ்டத்தையும் குறிக்கும். நகங்கள் எப்பொழுதும் ரோஸ் வர்ணமுடையதாய் அடியில் இளம் பிறைச் சந்திரன் போன்ற குறியுடன் இருந்தால் நல்ல சுபாவத்தைக் குறிக்கும். சில சாஸ்திரிகள் நகங்களினடியில் இளம் பிறைச் சந்திரன் போன்ற வெண்மையான வட்டமிருந்தால் சுக்ல பக்ஷத்தில் பிறந்தவர்களென்றும், வெண்மை வட்டமில்லையேல் கிருஷ்ண பக்ஷத்தில் பிறந்தவர்களென்றும் சொல்கிறார்கள்.

ஆறுவது பிரிவு.

## கைகளினுடைய நிறங்கள்-பின்புற மயிர்கள்.

கைகள்:— வெண்மையான தோலையுடையவைகள், மமதையையும், அனுதாபமில்லாமையையும், சிவப்பு நிறமுடையவைகள், இரத்த ஓட்டத்தையும், மஞ்சள் நிறமுள்ளவைகள், பித்தத்தன்மையையும், மங்கல் நிறமுள்ளவைகள் துக்க சுபாவத்தையும் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையினுடைய சருமமானது கடினமாகவோ, மெல்லி தாகவோ இருக்கும். இவற்றின் வித்தியாசத்தை யறிவது குணங்களை யறிவதற்கு உபயோகமாயிருக்கும்.

கை கடினமாயிருந்தால் வேலையில் ஊக்கத்தையும் சரீரத்தினல் உழைப்பதையுங் குறிக்கும். மிருதுவாயிருந்தால் அமைதி, சாந்தம், சோம்பல், அதிக ஆலோசனை, சுகத்தில் விருப்பம் இவற்றையுடையவர்களென்பதைக் குறிக்கும்.

கைகள் எப்பொழுதும் அதிக கடினமாகவும், அதிக மெல்லிதாகவும் இல்லாது சமமாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டும்.

## மயிர்கள்.

ரேகாசாஸ்திரம் படிப்பவர்கள் இதைப்பற்றியும் படிக்க வேண்டும். உள்ளங்கையின் பின்புறத்திலுள்ள மயிர்கள் நரம்புகளின் குணத்தை வெளிப்படுத்துகின்றன. கையின் பின்புறத்தில் மயிர்கள் அதிகமாயிருந்து அதுபோல் தேகத்திலு மிருந்தால் தேகபுஷ்டி, தயாளகுணம், தர்மசிந்தை, உபசரணை, பரோபகாரத்தன்மை இவற்றை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு துவாரத்திலிருந்தும் ஒவ்வொரு மயிர் கிளம்புமேயானல் அதிக செல்வத்தையும், இரண்டு மயிர்கள் கிளம்புமேயானல் செல்வம் வரப்போகிறதன்மையையும், மூன்று நாலு கிளம்புமேயானல் தரித்திரத்தையுங் காட்டும்.

மயிரில்லாத கையானது வீரமின்மை, பேதமை, இவற்றைக்குறிக்கும். பெண்கள் கையில் மயிர்களிருந்தால் குரூர புத்தியைக்காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




8-வது படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது பிரிவு.

# கிரக மேடுகள்.

மனிதனுடைய செல்வாக்குக்குக் காரணம் கிரகாதிகள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் அந்தக் கிரகாதிகளின் அனுகூலத்தை யறிய வேண்டியது. ரேகை சாஸ்திரத்திற்கு முக்கியமானது.

8-வது படத்தைக் கவனிக்கவும். அதில், வியாழன், சனி, சூரியன், புதன், செவ்வாய், சந்திரன், சுக்கிரன், இவைகளின் இடங்களைக் குறிப்பிட்டிருக்கிறது. எவ்வளவு கஷ்டப்பட்டுங் கையினால் வேலைசெய்தபோதிலும் இந்த மேடுகள் மாறா. மேடுகளாகவேயிருக்கும். நீங்கள் பூதக் கண்ணாடி மூலமாக ஒவ்வொரு கிரகத்தினுடைய மேடுகளை யும் நன்றாய்க் கவனிப்பீர்களேயானால் ஒவ்வொரு கிரகமே டும் பிரிந்து பிரிந்து வேறுபட்டிருப்பதைத் தெரிந்துகொள் வீர்கள். மேலும் கிரகமேடுகளிலிருக்கிற சிறியரேகைகள் ஒவ்வொரு கிரகத்திற்கும் எதிர்பக்கமாக வளைந்துபோகும்.

இந்தமேடுகளைக் கவனிப்பதினால் மனிதன் பிறக்கும் பொழுது எந்தக்கிரகம் அநுகூலமாயிருந்ததென்று அறிய லாம். அக் கிரகமேடுகளினால் மனிதனுடைய தோற்றம், நடை, குணம் இவற்றை யறியலாம். எந்த மேடாவது பொருமியிருத்தலுக்குப் பதிலாக தட்டையாக விருந்தால் அந்தக் கிரகத்தின் அநுகூலமில்லாததைக் குறிக்கும்.

எந்த மேடாவது அதிகபெரிதாயிருந்தால் அக்கிரகத் தின் குணங்கள் அதீதமாயிருத்தலைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை கிரகமேடுகள் இருக்கவேண்டிய இடத்தி லிருந்து புறம்பாயும் அல்லது ஒரு மேடுமற்ற மேட்டுப்பக் கமாகச் சார்ந்து மிருக்கும். இப்படி யிருதகலானவை நல்ல கெட்ட குணங்களைப் பங்குபற்றுகின்றன.

எந்தக் கிரகமேடு எந்தப் பக்கமாகச் சார்ந்திருக்கின் றதோ அந்த மேட்டின் குணங்களையும் பற்றும். சனி, குரு மேட்டுப்பக்கமாகச் சார்ந்திருந்தால் ஜாக்கிரதை, துக்கம், இவைகளையும், சனி சூரிய மேட்டுடன் சார்ந்தால் சனியி னுடைய துக்க விசாரங்கள் சூரியனைச் சேரும். சூரியன் மேடு புதன் மேட்டுடன் சார்ந்தால் தொழில், கலாஞானம் ஆகியவைகளைக் குறிக்கும்.

கிரகமேடுகள் ரேகைகளால் வெட்டப்பட்டிருந்தால் அந்தக் கிரகத்தின் அநுகூலமில்லாதவையும் துரதிஷ்டத் தையுங் குறிக்கும். எந்த மேட்டிலும் குறுக்குரேகைகள் நல்ல குறியல்ல. வியாழமேடு முதல் தனித்தனி ஒவ்வொரு கிரகமேட்டையும் சொல்வாம்.

## 1. வியாழமேடு.

படத்தில் காட்டியபடி வியாழமேடானது முதல் விர லின் அடியில் காணப்படும். இது நன்றாகப் பொருமியிருப் பின் மதப்பற்று, கௌரவம், மேனோக்கம், அகங்காரம், காரியத்தில் ஊக்கம், அதிகார ஆசை, மகிழ்ச்சி, ஜயம், தேகதிடம், உண்மையான அன்பு, நல்ல போஜன விருப் பம், ஆகியவைகளைக் கொடுக்கும்.

தட்டையாயிருந்தால் கீழ்ப்படிதலான குணம், அப ஜயம் அடைதல், மேல்நோக்கமில்லாமை, ஆகியவைகளைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 சனிமேடு

சனிமேடானது இரண்டாவது விரலின் அடியில் காணப்படும். இந்தமேடானது நன்றாகப் பொருமியிருப்பின் ஏகாந்த விருப்பம், விவேகம், மௌனம், ஞானம், பொறுமை, ஜாக்கிரதை, இரகசிய சாஸ்திர ஆராய்ச்சி, ஆகியவைகளைக் கொடுக்கும்.

தட்டையாயிருப்பின் வாழ்க்கைநிலைமையில் அந்தரம், தொழில்களில் அடிக்கடி தடை, துக்கசுபாவம், நோய், சந்தேகம் ஆகியவைகளைக்கொடுக்கும்.

## 3. சூரியமேடு

சூரியமேடானது மூன்றாம் விரலின் அடியில் காணப்படும். இந்த மேடு நன்றாகப் பொருமியிருப்பின் புத்தி சாதுர்யம், சித்திரவேலை, கவிதை, கீர்த்தி, அழகு, சந்தோஷம், ஆகியவைகளைக் கொடுக்கும்.

தட்டையாயிருந்தால் இந்தக் குணங்கள் இல்லாமையைக் குறிக்கும்.

## 4 புதன்மேடு

புதன்மேடானது நான்காவது விரலின் அடியில் காணப்படும். இந்த மேடு நன்றாகப்பொருமியிருப்பின் புத்தி கூர்மை, சமயோசிதபுத்தி, வாக்குச் சாதுர்யம், சாஸ்திரங்களில் விருப்பம் ஆகியவைகளைக் கொடுக்கும்.

தட்டையாயிருப்பின் மேல் சொல்லப்பட்ட குணங்கள் இல்லாமையைக் குறிக்கும்.

## 5. செவ்வாய் மேடு

செவ்வாய் மேடானது இரண்டு இடத்தில் காணப்படுகிறது. ஒன்று வியாழமேட்டுக்குக் கீழ் ஆயுள்ரேகைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும், இரண்டாவது புதன் மேட்டுக்கும் சந்திர மேட்டுக்கும நடுவில் காணப்படுகிறது, இந்த மேடுகள் நன்ருகப் பொருமியிருந்தால் தைரியம்,சண்டைக்குணம், மனவூக்கம் ஆபத்திலுங் குளிர்ச்சியான தன்மை, ஆகியவைகளைக் கொடுக்கும், தட்டையாயிருப்பின் கோழைத்தனம், அச்சம் ஆகியவைகளைக் கொடுக்கும்.

## 6. சந்திரமேடு


சந்திரமேடானது செவ்வாய் மேட்டுக்குக் கீழ் கையினடியிலிருக்கிறது. இந்த மேடு நன்ருகப் பொருமியிருப்பின் ஏகாந்தமாக விருக்க விருப்பம், கற்பனுசக்தி, நாகரீகத்தன்மை, கலாஞான விருப்பம், சங்கீத விருப்பம், ஆகியவைகளைக் கொடுக்கும். தட்டையாயிருப்பின் யூகிக்கும் தன்மையில்லாமை, மனோபாவனையில்லாமை ஆகியவைகளைக் கொடுக்கும்.

## 7 சுக்கிரமேடு

சுக்கிரமேடானது பெருவிரலின் அடியில் இருக்கிறது இது நன்ருகப் பொருமியிருப்பின் அழகில் விருப்பம்,தேகதிடம், அன்பு, இனிமையான பேச்சு, இரக்கம், சிற்றின்ப விருப்பம், சங்கீதவிருப்பம், ஆகியவைகளைக் கொடுக்கும்.

தட்டையாயிருப்பின் மமதை, அனுதாபமின்மை, தேகதிடமில்லாமை, சிற்றின்ப வாஞ்சையில்லாமை ஆகியவைகளைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயுள்விதி ரேகை
காலளவுப் பிரமாணம்

9-வது படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது பிரிவு

# உள்ளங்கையிலுள்ள ரேகைகள்.

உள்ளங்கையிலுள்ள ரேகைகளைப் பற்றிப் படிப்பதினால் சௌக்கியம், செல்வம், வாழ்வு, குடும்பவிஷயங்கள், முதலிய அநேக விஷயங்களை யறியலாம். இந்த ரேகைகள் கடவுளுடைய கட்டளைபோல் என்றும் மாறுபடாமலிருக்கின்றன. சில சமயங்களில் கிரகமேடுகளின்மேல் சிறு ரேகைகள் தோற்றுகின்றன. அவை வெவ்வேறு அர்த்தங்களை வெளிப்படுத்துகின்றன.

இந்த ரேகைகளை எந்தக் கைகளில் பார்க்கவேண்டுமென்று பலர் கேட்கிறார்கள். இடதுகை ரேகையானது இயற்கையையும், வலதுகை ரேகையானது ஜீவியத்தை எப்படிக்கொண்டு செலுத்துவதென்பதையுங் குறிக்கும். ஆதலினால் இரண்டு கைகளையும் பார்த்தே எந்த விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

## 1. ஆயுள்ரேகை

ஆயுள்ரேகையானது பெருவிரலுக்கும், முதல் விரலுக்கும் நடுவே உற்பத்தியாகி சுக்கிரமேட்டை வளைத்துக் கொண்டிருக்கும். இந்த ரேகையானது தேகதிடம், வயசு, ஆபத்துகள், பிரதான சம்பவங்கள் நடக்குங்காலம் ஆகியவற்றைக் குறிக்கும். ஆயுள்ரேகை துலக்கமாகவும் நீளமாகவும், நல்ல நிறத்தோடு கூடிச் சுக்கிரமேடு முழுவதையும் வளைத்துக்கொண்டிருந்தால் தேகதிடம், நீண்ட ஆயுள், கடுமையான வியாதியின்மையையுங் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக ஆயுள்ரேகை நீண்டிருந்தால் நீண்ட ஆயுள். குறுகியிருந்தால் குறைந்த ஆயுள். ஆயுள்ரேகையைக்கொண்டு மாத்திரம் ஆயுளைக் குறிப்பிட முடியாது. மற்ற ரேகைகளையும், கிரகமேடுகளையும் கவனித்து ஆயுளை நிர்ணயிக்கவேண்டும்.

ஆயுள்ரேகையானது ஆழமாக மங்கலான நிறத்தோடு கூடியிருந்தால் அசௌக்கியம், கெட்டநிலைமை, முற்கோபம் ஆகியவைகளைக் குறிக்கும். ஆழமாக வெண்மையாயிருந்தால் சஞ்சலம், சந்தேகம், தேகசுகக்குறைவு, ஊக்கமின்மை, ஆகியவைகளைக் குறிக்கும். ஆழமாகச் சிவப்பாயிருந்தால் திடகாத்திரம், மூர்க்கசுபாவம், எவ்விஷயத்திலும் ஊக்கம் ஆகியவைகளைக் குறிக்கும். ஆயுள் ரேகையானது இரண்டு கைகளிலும் குறுகிக் கிரகமேடுகளும் வளர்ச்சியில்லாவிடில் குறைந்த ஆயுளைக் குறிக்கும். ஆயுள்ரேகை சுக்கிரமேட்டில் ஏறினமாதிரியாய் இருந்து மேடும் வளர்ச்சியில்லாவிடில் திடமற்ற சரீரத்தைக்காட்டும். இப்படிப் பெண்களின் கையில் இருந்தால் பிரசவ தொந்தரவைக் காட்டும்.

இந்த ரேகையானது பட்டும் படாமல் மெல்லியதாகத் தோற்றினால் ஆயுள்காலமெல்லாம் நோயைக் குறிக்கும். இந்த ரேகையானது, ஒரு கையில் உடைந்து மறு கையில் உடையாமல் இருந்தால் அதே வயதில் கொடூரமான வியாதியைக் குறிக்கும். இரண்டு கையிலுமுடைந்திருந்தால் மரணத்தைக் காட்டும். சங்கிலி போலிருந்தால் நீங்காத வியாதியையும், பலவீனத்தையுங் குறிக்கும்

ஆயுள் ரேகையில் தீவு காணப்பட்டால் அதற்குரிய வயதில் வியாதி உண்டாகும், காலமுடிவில் தீவுமாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேகை துலக்கமாகும். ஆயுள்ரேகையில் சூலக்குறி காணப்படின் அதற்குரிய வயதில் ஆபத்தைக் குறிக்கும். நக்ஷத்திரக்குறி காணப்படினும் பிராணாபத்தைக் குறிக்கும். ஆயுள்ரேகை உடைந்து, உடைந்த மேல்பாதி விதிரேகையைச் சாருமாயின் கொடியநோயையும், விதியின் பலத்தால் தப்புவித்தலையும் காட்டும். ஆயுள்ரேகையில் சதுரம் காணப்பட்டால் எந்தப் பாகத்திருந்தாலும் கொடிய வியாதியிலிருந்து தப்புவதைக் காட்டும்.

உதாரணமாக ஆயுள்ரேகை உடைந்து அவ்விரு துண்டுகளையும் சதுரம் சேர்த்துக்கொண் டிருக்குமேயானால் நிச்சயமாகக் கொடிய வியாதியிலிருந்தும், ஆபத்திலிருந்தும் தப்பவைக்கும்.

ஆயுள்ரேகையில் கறுப்புப்புள்ளிகளிருந்தால் நரம்பு பெலயீனமான வியாதியை அதற்குரிய வயதில் காட்டும். ஆயுள் ரேகையில் வட்டக்குறியிருப்பின் அதற்குரிய வயதில் கண்பார்வை கெடும். ஆயுள்ரேகையில் கீழ்நோக்கிய கிளைகளிருந்தால் அதற்குரிய காலங்களில் நரம்புப்பலயீனத்தையும், கஷ்ட நஷ்டங்களையும் காட்டும்.

செவ்வாய் மேட்டிலிருந்து ஒரு ரேகையானது ஆயுள் ரேகையை வெட்டிக்கொண்டு சனிமேட்டுக்குப் போகுமானால் வெட்டுகிற வயதில் காயமடைவதைக் குறிக்கும். ஆயுள்ரேகையை அநேக சிறு ரேகைகள் வெட்டினால் அடிக்கடியுள்ள நோயைக் குறிக்கும். ஆயுள்ரேகை வியாழ மேட்டிலிருந்து ஆரம்பித்தால் கீர்த்தி, செல்வாக்கு, மேன்மை, ஜயம், ஆகியவைகளைக் குறிக்கும்.


ஆயுள்ரேகையின் கிளை வியாழமேட்டுக்குப் போனால் படிப்படியாய் உண்டாகும் செல்வத்தைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள்ரேகையின் கிளை சனி மேட்டுக்குப் போகுமானல் அக்காலத்தில் தொழிலில் அபிவிர்த்தியைக் காட்டும். ஆயுள்ரேகை இறுதியில் இருகிளைகளாகப் பிரிந்திருந்தால் கப்பல் பிரயாணம், தூரதேச யாத்திரை இவற்றைக் குறிப்பதுடன் அன்னிய தேசங்களில் செல்வாக்குடையவர்களாகவும், தொழிலுடையவர்களாகவு மிருப்பார்கள். இவர்கள் அடிக்கடி பிரயாணஞ்செய்ய விரும்புவார்கள். இப்படிக் குறியுள்ள எத்தனையோ கப்பல் பிரயாணிகளைப் பார்த்திருக்கிறேன். ஆயுள்ரேகையினுள்ளே ஒரு துணைரேகையிருக்குமாயின் ஆயுள்ரேகையிலுண்டாகும் பிளவுகள், குத்துகள், சிலுவைக்குறிகள், முதலியவற்றினல் உண்டாகும் அபாயங்களிலிருந்து தப்புவித்து நல்ல தேகதிடத்தைக் கொடுக்கும். ஆயுள்ரேகையினுல் உண்டாகும் தொந்தரவுகளைப் போதிய மனேபலத்தாலும், தெய்வவழிபாட்டாலும் நீக்கிக் கொள்ளலாம்.

இரண்டாவதாக ஆயுள்ரேகையின் காலம், அளவு, இவற்றை அறிந்துகொள்ள வேண்டியது. கால அளவைக் குறிப்பிட்டிருக்கிற 9-வது படத்தைப் பார்த்தால் ஆயுள் ரேகையின் காலஅளவை அறிந்து கொள்வீர்களென நினைக்கிறேன். மனிதனுக்கு ஆயுள் நூறு என முன்னோர்கள் கூறியிருக்கிருர்கள். அதுபற்றியே ஆயுள்ரேகையானது ஒவ்வொரு பாகமும் பத்துப் பத்து வருஷத்தைக் குறித்துக்கொண்டு பத்துப் பாகங்களாக விருக்கின்றன இந்தக் காலஅளவை மனனஞ் செய்துகொள்வீர்களானல் உங்கள் வாழ்நாட்களில் வரும் பல கஷ்டங்களையும் அதிஷ்டங்களையும் தெரிந்துகொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




10 வது படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவது பிரிவு

# புத்திரேகை.

ஆயுள்ரேகைக்கு அடுத்தாற்போல் புத்திரேகை பிரதானமாக இருக்கிறது. ஏனெனில்:- புத்தியாகிய பெருஞ் செல்வம் இருக்குமேயானால் வாழ்நாட்களிலுண்டாகும்பல நஷ்ட கஷ்டங்களிலிருந்து தன்னைவிடுவித்து நீண்ட வாழ்வையும், சந்தோஷ வாழ்க்கையையும் பெறலாம். உதாரணமாக: யோகிகள் புத்தியினாலன்றோ நீர்க்குமிழி போலுள்ள இவ்வுலக வாழ்க்கையை விட்டு நிலையுள்ள இன்பத்தைப் பெற விதியை வென்று ஆயுளை நீடிக்கச் செய்து நோயற்று வாழ்கிறார்கள். இதனாற்றான் புத்திரேகை பிரதானமென்று சொல்லப்படுகிறது.

புத்திரேகயானது சாதாரணமாக முதல் விரலுக்கும், பெருவிரலுக்கும் நடுவே ஆயுள்ரேகையோடு கூட அல்லது சமீபமாக வியாழமேட்டிலிருந்து ஆரம்பித்து கையின் குறுக்கே நீளமாகவோ குறுகியதாகவோ செல்லும்.

புத்திரேகையானது நீண்டு நல்ல ரேஸ் நிறத்தோடும் கூடியிருந்தால் நல்லபுத்தி சாதுர்யத்தையும் தன்னுடைய சீவியகாலத்தை நன்கு செலுத்தும் வல்லமையையுங் குறிக்கும். புத்திரேகையானது குறுகியிருக்குமேயானால் புத்திக்குறைவையும், கோபத்தையும், ஆபத்துகளுக்குள் அகப்படுவதையுங் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய் மேட்டுக்கு நீண்டிருக்கிற புத்திரேகை பொருள் ஆசையையும், வேலையில் ஊக்கத்தையும் குறிக்கும். சந்திரமேட்டுக்குச் சற்றே வளைகிற புத்திரேகையானது கற்பனுசக்தி, மனோபாவனை, பகுத்தறிவு, ஆகியவைகளைக் குறிக்கும்.

புத்திரேகை சந்திரமேட்டில் அதிகம் வளைந்து நீண்டு விரல்களும் சதுரமாயிருப்பின் இரகசிய சாஸ்திர உணர்ச்சியும், அதிக கற்பனு சக்தியும், அதை வெளியிடுதலையுங் குறிக்கும் புத்தி ரேகையானது கையின் குறுக்கே மறுபக்கம்போய் புதன்மேட்டை நோக்கி வளையுமேயானல் கைத்தொழில், வியாபாரம் இவற்றில் ஊக்கத்தையும், அதற்குரிய சாமர்த்தியத்தையும் குறிக்கும். ஆனல் சிலர் சிலசமயம் தங்கள் பொருளாசையினுல் ஆலோசனையில்லாது பலகஷ்டநஷ்டங்களுக்குள்ளாகிறுர்கள்.

புத்திரேகையானது ஆரம்பத்தில் ஆயுள்ரேகையுடன் சேராது சிறிது இடம்விட்டு ஆரம்பிக்குமேயானல் அபூர்வப் பிறவியென்றும், விவாகமாகாதென்றும் சில சாமுத்திரிகா சாஸ்திரிகள் சொல்கிறுர்கள். ஆனல் இது எனது அனுபவத்துக்கு ஒத்ததாயில்லை. இப்படிப்பட்ட ரேகையையுடைய ஒருவரைச் சிறம்பானில் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர் தெரிவித்ததாவது "சில மாதங்களுக்குமுன் எம்மிடம் ஒரு ரேகைசாஸ்திரி வந்து எமது கையைப் பார்த்து விவாகமாகாதென்றும், விவாகமானல் பிரிந்துவிடுவோமென்று தெரிவித்ததாகவும், தாம் அவரை கேலிபண்ணியனுப்பிவிட்டதாகவும் தெரிவித்து, அவர் சொன்னதிற்கு மாருக 22-வது வயதிலே விவாகம் செய்து தமது 48-வது வயது (இதுநாள்) வரை ஒருநாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குநாளும் பிரிந்திரிந்ததில்லை யென்றும் தெருவித்தார். நான் உடனே அவர் கையைக்வனித்து முற்கோபம் சீக்கிர ஆலோசனை, சீக்கிர முடிவு, வாக்குச் சாதுர்யம், இவைகள் உமக்கு அணிகலன்களாக இருக்குமென்றேன். அவர் தலையசைத்து வாஸ்தவம். என்னுடைய எண்ணத்திற்கு மாறாகச் சிலசமயங்களில் மனைவியிருத்தலினால் கலகமேற்படுவது வழக்கம். ஆனால் பிரிந்ததேயில்லை என்றார். இப்படிப்பட்ட ரேகையுடையவர்கள் எந்த விஷயத்திலும் தீர்க்காலோசனை செய்து பிரவேசிப்பது உத்தமம்.

புத்திரேகையானது மேலே திரும்பி எந்த மேட்டுக்குப்போனாலும் அந்தமேட்டுக்குணம் அதீதப்படுதலினால் கெட்ட குறியாயிருக்கிறது. புத்திரேகை முடிவில் கிளையாக விருந்தால் தந்திர புத்தியையும் பலவிதமான ஆலோசனையையுங் குறிக்கும். புத்திரேகை யிரண்டாயிருந்தால் நல்ல குறியாகும். புத்திரேகையானது நன்றாகச் சந்திர மேட்டு அடிவரையும் வளைந்து இறுதியில் ஒரு நட்சத்திரக்குறியும், சனிமேடு அதியுன்னதமாயும் இருந்தால் தற்கொலைக்காகிய எண்ணமிருக்கும். பொதுவாகப்புத்திரேகையானது சந்திரமேட்டில் நன்றாக வளையுமாயின் தங்கள் மனக்கோட்டையினால் துக்கசுபாவ முடையவர்களாகவே காணப்படுவார்கள்.

புத்திரேகை யுடைந்திருந்தால் தலைக்கு ஆபத்தையும் அதில் ஒரு சதுரமிருப்பின் ஆபத்திலிருந்து காப்பாற்றப் படுவதையும், சங்கிலி போலிருந்தால் தலையைப்பற்றிய வியாதியையும், தீவு இருந்தால் மனத்தொந்தரவையும், நக்ஷத்திரக்குறி இருந்தால் தலைக்கு ஆபத்தையும், கறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புப் புள்ளிகளிருந்தால் கண்ணோய், தலைவலி, எண்ணம் நிறைவேறுமை, ஆகியவைகளையும், வட்டமிருப்பின் மூளைத்தொந்தரவையும் காட்டும்.

புத்திரேகையில் அனேக தீவுகளிருப்பின் தீங்கில்லாத பைத்தியத்தையும், அனேக சிறுசிறு துண்டுகளாகின் மூர்க்கமான பைத்தியத்தையும், வெண்மையாயிருந்தால் மூளையின் பலவீனத்தையும், ரோஸ் வர்ணமாயிருந்தால் மனோபலத்தையும், நீல நிறமாயிருந்தால் இரத்தோட்டக் குறைவையும் காட்டும்.

புத்திரேகையானது கைகளுக்குத் தகுந்தவாறு காணப்படும். சாதாரணமாக மெல்லிய தோலையுடைய கைகளில் சந்திரமேட்டில் வளைந்தும், தடிப்பான தோலையுடைய கைகளில் நேராயுமிருக்கும். இவைகள் வித்தியாசப்படின் குணங்களும் வித்தியாசப்படும். வித்தியாசத்துக்குத் தக்க பலன்களை நுட்பபுத்திகொண்டு அறிந்து கொள்வீர்களாக.

பத்தாவது பிரிவு

# இருதய ரேகை.

இருதய ரேகையானது கையினோரத்தில் புதன்மேட்டுக்குக்கீழ் ஆரம்பித்து ஏறக்குறைய வியாழமேடு வரை செல்லும் இந்த ரேகையைச் சாமுத்திரிகா சாஸ்திரத்தில் ஆயுள்ரேகையெனக் குறிப்பிட்டிருக்கிறது ஆனால் பெயரளவில் வித்தியாசமேயன்றிப் பலனில், வித்தியாசமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதய ரேகையானது நல்ல நிறத்தோடும், புள்ளிகள் வெட்டுகள், முதலிய கெட்டகுறிகளில்லாது வியாழமேட்டில் கிளையோடு இருப்பின் மேலானவர்களுடைய சினேகத்தையும் உண்மையான அன்பையும், சந்தோஷவாழ்க்கையையும் குறிப்பிடலாம். இப்படி ரேகை ஒருவர் கையிலிருந்து மற்ற ரேகைகளும் நன்றாயமையுமேயானால் கீர்த்திவாய்ந்த தலைவர்களாகவும், உயர்தரப்பட்டம் பெறுபவர்களாகவு மிருப்பார்கள். இவர்கள் நம்பிக்கை மோசம் செய்யமாட்டார்கள்.

இந்த ரேகையானது வியாழமேட்டுக்குப் பதிலாகச் சனிமேட்டுக்குக் கீழ் கிளையில்லாது முடிவடையுமேயானால் சுயநலம் கருதுபவர்களாயும், உலகப் பொருள்களில் விருப்பமுடையவர்களுமாக இருப்பார்கள். கூட்டு வியாபாரஞ் செய்பவர்களும், வேறு எந்தவிதமான கூட்டுத்தொழில் செய்பவர்களும் இவற்றை நன்றாகக் கவனிக்கவேண்டும். இது ஒருபொழுதும் மாறுபடாது. சிலர் தங்கள் கைகளில் கெட்ட குறிகளிருந்தால் நம்பிக்கையிளந்து ரேகாசாஸ்திரத்தைப் பொய்யெனச் சொல்ல முன்வருகின்றனர். சாஸ்திரமானது ஒருபொழுதும் பொய்யாக மாட்டாது. அனுபவம் வாய்ந்த தீர்க்கதரிசிகளால் மனிதவர்க்கத்தின் ஈடேற்றத்தின் பொருட்டு கடவுள் வாக்காக அருளப்பட்டது. இச்சாஸ்திரத்தின் உதவியால் ஒவ்வொருவரும் தங்கள் குணுகுணங்களையும் கஷ்டநஷ்டங்களையும் அறிந்து நல்லோரின் சேர்க்கையினுலும் போதிய மனேபலத்தாலும், தெய்வவழிபாட்டினுலும், தப்பவித்துக்கொள்ளலாம், எப்படியெனின்:- காட்டிலேயுள்ள கொடிய புலி, காடிசிங்கம் யானை முதலிய துஷ்ட மிருகங்கள் மனிதனிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்பட்டுவிட்டால் தங்கள் மூர்க்ககுணம் மாறி, சாத்விக மடைகின்றன. பட்டினத்தடிகள், தாயுமானவர், திருமூலர் முதலிய ஞானிகளும், கடவுளைச் சதா தியானிப்பவர்களுக்கு அஞ்ச வருவது யாதொன்றுமில்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆத்மஞானியாகிய கிறீஸ்துநாதரும், 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று கூறியுள்ளார். ஆதலினால் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாளிலுள்ள பல கஷ்டங்களையும் நீக்கிவிடலாமென்பது எனது நம்பிக்கை. இவற்றை விரிக்கிற் பெருகும். விரிவஞ்சி விடுத்து எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கவனிப்போம்.

இருதயரேகையானது முதல் விரலுக்கும் இரண்டாவது விரலுக்கும் இடையில் முடிவடையுமானால் நேசித்தால் நேசம், வெறுத்தால் வெறுப்பு, சாந்தம், பொறுமை ஆகியவைகளைக் குறிக்கும். சுருங்கக் கூறின் சனிக்குள்ள சுயநலப் பிரியமும், வியாழனுக்குள்ள பரோபகாரசிந்தையும் சேர்ந்ததாயிருக்கும்.

இருதயரேகையானது கையைக் குறுக்கிட்டு நேர்கோடாகப் புத்திரேகைக்குக் கிட்டப் போகுமேயானால் மாயமாலம், வஞ்சகம், ஆகியவைகளைக் குறிக்கும். இருதயரேகையானது கீழ்தாழ்ந்து புத்திரேகையுடன் வருமானால் நேசர்களுக்குக் கட்டுப்படுதலையும், புத்திரேகை மேலெழுந்த வாறுகாணப்பட்டால் புத்திநேசத்தைக் யாழுவதையும் குறிக்கும். இவற்றை விவாக விஷயத்தில் நன்றாகக்கவனிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதயரேகையானது கிளையில்லாமலும், மெல்லிதாகவும், அதே ரேகை அடியில் கிளைமூலங்களில்லாவிடினும் மலட்டுத்தன்மை, அன்பில்லாமை, ஆகியவைகளைக் குறிக்கும். இருதயரேகையில் உள்ள மேல்நோக்கிய கிளைகள் நேசத்தில் மேன்மையையும், கீழ்நோக்கிய கிளைகள் நேசத்தில் நிச்சயமில்லாமை, அழுத்தமான அன்பில்லாமை. ஆகியவைகளையுங் குறிக்கும். ஆயுள், இருதயம், புத்தி, இம்மூன்று ரேகைகளும் வியாழமேட்டுக்குக் கீழ்ச்சேருமானல் எதிர்பாராத ஆபத்தையும், வலியப்போய்ச் சங்கடத்துக்குள்ளகப்பட்டுக் கஷ்டப்படுவதையும் குறிக்கும். இருதயரேகை இறுதி கீழ்நோக்கி வளையுமாயின் தன்னில் குறைந்த இடத்தில் நேசத்தைக் குறிக்கும்.

இருதயரேகை உடைந்திருந்தால் வியாதி அல்லது நேசத்தில் மனமுடையக்கூடிய சங்கடத்தைக் காட்டும். இருதயரேகையானது சங்கிலி போலிருந்தால் இரத்தாசயக்குறைவு, நெஞ்சுத்துடிப்பு, சந்தோஷக்குறைவு, ஆகியவைகளைக் குறிக்கும், இருதய ரேகையின்மேல் தீவுகளிருந்தால் இருதய வியாதியைக் காட்டும். இருதய ரேகையில் அனேக வெட்டுகள் அல்லது கறுப்புப்புள்ளிகளிருந்தால் வியாதியையும், நேசத்தில் கஷ்டங்களையும், மற்றவர்களை எளிதில் நம்பி மோசம் போவதையும் காட்டும்,

இருதயரேகைகளின் மேல் சிவப்புப்புள்ளிகளிருந்தால் படபடப்பு, நெஞ்சுத்துடிப்பு, நேசத்தில் துக்கம், ஆகியவைகளைக் காட்டும். இருதயரேகை சிவப்புநிறமாயிருந்தால் ஊக்கமான நேசத்தையும், ரோஸ் வர்ணமாயிருந்தால் தேகாரோக்கியத்தையும், மஞ்சள் நிறமாயிருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரல் சம்பந்தமான வியாதியையும், வெண்ணிறமானால் தேகாரோக்கியக் குறைவையும், மஞ்சல் நிறமாயிருந்தால் இரத்தோட்டக் குறைவையும், காட்டும்.

பதினோராவது பிரிவு

## விதி ரேகை.

விதிரேகையானது ஒவ்வொரு மனிதரின் கையிலு மிருக்கவேண்டிய பிரதானமான ரேகையாகும். இந்த ரேகையைச் சில ரேகை சாஸ்திரிகள்; சனிரேகை யென்றும், ஊர்த்துவரேகை யென்றும், அதிஷ்டரேகை யென்றும், வியாக்கியானம் செய்திருக்கிறார்கள், இந்த ரேகைக்கு விதி ரேகை என்று சொல்வது மிகவும் பொருத்தமாகும், விதியினால் வாழ்வில் ஏற்படும் சுகம், துக்கம், ஆதரவு, ஜயம், முதலியவற்றை இந்தரேகை வெளிப்படுத்துகின்றது. இந்த ரேகையானது ஆயுள்ரேகையிலிருந்தும், மணிக்கட்டிலிருந்தும், புத்திரேகையிலிருந்தும், சந்திர மேட்டிலிருந்தும் இருதய ரேகையிலிருந்தும் ஆரம்பித்துச் சாதாரணமாகச் சனிமேட்டை நோக்கிச் செல்லும். ஆயுள்ரேகையிலிருந் தாரம்பித்தால் சந்தோஷமும், அதின் கஷ்டமும் சொந்தப் பொறுப்பினாலே யேற்படும். மணிக்கட்டிலிருந்து ஆரம்பித்து நேராகவும், சுத்தமாகவும், சனிமேடுவரை மேல் நோக்கிய கிளைகளுடனிருந்தால் வாழ்வானது சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரமேட்டிலிருந்து ஆரம்பித்துப் போகுமேயானல் தொழில், சந்தோஷம், செல்வாக்கு, கீர்த்தி, முதலியன பொதுஜனங்களால் ஏற்படுமென்பதைக் குறிக்கும். புத்தி ரேகையிலிருந்து ஆரம்பித்துப் போகுமேயானல் தமது வாழ்நாளின் மத்தியபாகத்திலிருந்து சொந்தப் புத்தியினல் பொருள், கீர்த்தி முதலியன சம்பாதிப்பதைக் குறிக்கும். இருதயரேகையிலிருந்து ஆரம்பித்துப் போகுமேயானல் வாழ்வின் அந்தியகாலத்திலேசிநேகிதர்களால் உண்டாகும் நன்மையைக் குறிக்கும். விதிரேகையானது சனிமேட்டைத்தாண்டிச் செல்லுமானல் சனியினுடைய கபடத் தன்மையையும், எதிர்ப்பையுங் குறிக்கும்.

விதிரேகையானது புத்திரேகையோடு நிற்குமேயானல் புத்தியை நல்ல வழியில் செலவழிக்காததினல் மத்திய காலத்தில் அதிஷ்டங் குன்றும். விதிரேகையானது புத்தி ரேகையோடு நின்று அதில் இருந்து வேறோர் ரேகை மேலேசெல்லுமானல்35-வது வயதில்தொழில்நஷ்டம் பொருள்கஷ்டம், தொழில் மாற்றம் ஆகியவைகளைக் குறிக்கும்.

விதிரேகையானது ஆரம்பத்தில் சிறிதுகாலமிருந்து பின் இல்லாதிருப்பின் விதிரேகை முடிந்த அக்காலமுதல் குற்றேவல் செய்து நாய்படாப்பாடு பட்டு ஜீவியத்தைக் கழிக்க நேரிடும். விதிரேகை யில்லாமலிருந்தால் பிரயோசனமற்ற எளிமையான ஜீவியத்தையும், அல்லது செலவாளியாய் இருத்தலையுங் குறிக்கும். இந்த விதிரேகையில்லாதிருந்தால் வாழ்வில் ஜயம், கீர்த்திபெறவேண்டுமென்னும் எண்ணமுடையவர்களுக்கு அபஜயமே உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ரேகையில்லாதவர்கள் உடம்பால் உழைக்க நேரிடும். உழைத்தாலும் பிரயாசைக்குத் தக்க கூலி கிடைப்பதில்லை. விதிரேகையில்லாத அநேகரை நான் பார்த்திருக்கிறேன். அவர்களில் சிலர் மாத்திரம் தான் உத்தியோகத்திலிருக்கிறார்கள். மற்றவர்களெல்லோரும் தொழிலாளிகளாகவே யிருக்கிறார்கள். உத்தியோகத்திலிருப்பவர்களும் வீண்செலவாளிகளாயும், சொந்தப்பொறுப்பில்லாதவர்களாயும், ஜாக்கிரதை யற்றவர்களாயு மிருக்கிறார்கள்.

விதிரேகையானது இருதயரேகையோடு நின்று சூரியரேகையு மில்லாதிருப்பின் எல்லோருடனும் நன்றாகச் சிநேகஞ்செய்து வீணாகப் பணங்களைச் செலவுசெய்கிற பிரபுவாயிருப்பான். விதிரேகையானது சனிமேட்டில் பல குறுக்குரேகைகளால் வெட்டப்பட்டிருந்தால் அந்திய காலத்திலுள்ள சங்கடங்களையும், துக்கங்களையுங் குறிக்கும்.

விதிரேகையானது அலைபோல் வளைந்து வளைந்து இருக்குமானால் பேதாபேதமான ஜீவியத்தைக் குறிக்கும். சுருங்கக்கூறின், இந்தரேகையுடையவர்கள் சகடயோகக்காரர்கள். விதிரேகை உடைந்து துண்டு துண்டாகவிருப்பின் அடிக்கடி கஷ்டங்களையும் சந்தோஷக் குறைவையும், தொழில் மாற்றத்தையுங் குறிக்கும். விதிரேகை யாரம்பத்தில் ஒரு நக்ஷத்திரக்குறி யிருப்பின், இளவயதில் தாய் தகப்பனார் இறத்தலையும் அல்லது பிதுரார்ச்சிதத்தை இழத்தலையுங் குறிக்கும். விதிரேகையில் நக்ஷத்திரக்குறி எந்த இடத்திலிருந்தாலும் கெட்ட பலனைக் குறிக்கும். விதி ரேகையிற் சிலுவைக்குறி யிருப்பின் அதற்குரிய வயதில் தொழிலுக்கு மற்றவர்களுடைய எதிர்ப்பைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிரேகையில் தீவு இருந்தால் அதற்குரிய வயதில் பலகஷ்டநஷ்டங்களைக் குறிக்கும். சில சாஸ்திரிகள், விதிரேகையில் தீவு காணப்பட்டால் கள்ள நட்பினால் பொருள் உண்டாகும் என்று கூறுகிறார்கள்.

விதிரேகையானது சில சமயங்களில் மற்றமேடுகளுக்கும் செல்லும். சென்றால் அந்தமேடுகளின் குணத்திற்கு ஜயத்தைக் காட்டும். விதி ரேகையில் கிளைகள் சிலசமயங் காணப்படும், காணப்படின் மேல் நோக்கிய கிளைகள் நன்மையையும், கீழ்நோக்கிய கிளைகள் தீமையையும் குறிக்கும். விதிரேகையானது மெல்லிய தோலையுடைய கைகளில் நன்றாயும், தடிப்பான தோலையுடைய கைகளில் மங்கலாயுமிருக்கும். விதிரேகையானது தடித்த தோலையுடைய கைகளில் கொடுக்கிற ஜயத்தில் பத்திலொன்றுதான் மெல்லிய தோலுடைய கைகளில் கொடுக்கும். இவற்றினது வித்தியாசத்தைப் படிக்கும் நண்பர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். விதிரேகையின் காலவளவை 9-வதுபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது அவற்றைக் கவனித்து அறிந்துகொள்வீர்களாக

பன்னிரண்டாவது பிரிவு

# சூரிய ரேகை.

சூரியரேகையானது ஒவ்வொருவர் கையிலுமிருக்க வேண்டிய ஓர் நல்ல அதிஷ்டரேகையாகும். இந்தரேகையானது கல்வி, ஜயம், கீர்த்தி, பணம், இவைகளைக்குறிக்கும் ஒரு பிரதானரேகையாக இருக்கிறது. சூரியன் பூமிக்குப் பிரகாசத்தைக் கொடுக்கிறான். இந்த ரேகை மனிதர்களுக்குப் பிரகாசத்தைக் கொடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியரேகையானது ஆயுள்ரேகையிலாவது, சந்திர மேட்டிலாவது, புத்திரேகையிலாவது, இருதயரேகை யிலாவது ஆரம்பித்து சூரிய மேட்டை நோக்கிச் செல் லும். இந்த ரேகையானது பிரகாசமாகவும் நன்றாகவு மிருந்தால் கீர்த்தி, செல்வம், ஜயம், பெருமை ஆகியவை களைக் கொடுக்கும். இந்த ரேகை யில்லாமலிருந்தால் எவ்வளவு கெட்டிக்காரன் அல்லது யோக்கியவானுயிருந்த போதிலும் கீர்த்தி, பணம், ஜயம், மதிப்பு ஆகியவைகளைப் பெற முடியாது.

சூரிய ரேகை ஆயுள் ரேகையிலிருந்து ஆரம்பித்தால் சொந்தப் பொறுப்பினுல் அடையுங் கீர்த்தியையும், ஜெயத் தையும், சந்திர மேட்டிலிருந்து ஆரம்பித்தால் பொது ஜனங்களால் உண்டாகும் பொருள், கீர்த்தி ஆகியவைகளை யும் புத்தி ரேகையிலிருந்தாரம்பித்தால் மத்திய வயதில் புத்தியினுல் சம்பாதிக்கும் பெருமை செல்வாக்கு ஆகிய வைகளையும், இருதய ரேகையிலிருந்து ஆரம்பித்தால் வாழ் வின் அந்திய காலத்தில் நேசர்களால் உண்டாகும் நன்மை யையுங் குறிக்கும்.

சூரியமேட்டில் பல சிறுரேகைகள் காணப்பட்டால் பலவிதமான தொழில்கள் செய்வதையும் அதிலிருந்து ஜெ யத்தையுங் குறிக்கும். சூரியரேகை அடிக்கடி சிறுகுறுக் குரேகைகளால் வெட்டப்பட்டால் அந்தந்தக் காலங்களில் பொருட் செலவு, மானக்குறைவு ஆகியவைகளைக் குறிக் கும். சூரியரேகை உடைந்திருந்தால் பொருள்விரயத்தைக் குறிக்கும். சூரியரேகையில் தீவு இருந்தால் அந்தத் தீவு இருக்கும் வரைக்கும் அபஜெயத்தைக் குறிக்கும். சூரிய ரேகையில் நக்ஷத்திர மெந்தப்பாகத்திலிருந்தாலும் ஓர் நல்ல அதிஷ்டக்குறியாகும். முக்கோண மிருந்தால் பெரியவர் களோடு உள்ள கூட்டுறவைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்றுவது பிரிவு

# ஆரோக்கிய ரேகை

ஆரோக்கிய ரேகையானது மனிதனுக்கு ஆரோக்கிய மின்மையை வெளிப்படுத்தும்ரேகையாக இருக்கிறது. இந்த ரேகையில்லாதிருப்பது ஒரு வரப்பிரசாதமெனக் கருதவேண்டும். இந்த ரேகை கையிலிருந்தால் நிச்சயமாக ஏதாவது ஒரு வியாதியிருத்தலைக் குறிக்கும். இந்த ரேகை சாதாரணமாகப் புதன்மேட்டிலிருந்தும், இருதயரேகையிலிருந்தும் ஆரம்பித்துக் கீழ்நோக்கிச் செல்லும். இதைவிட ஆயுள் ரேகையிலிருந்தாவது, ஆயுள் ரேகைக்குச் சமீபத்திலிருந்தாவது ஆரம்பித்து, ஆரோக்கியரேகை புதன்மேட்டுக்குப் போகுமென, சில ரேகைசாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஆனால் அது எனது அனுபவத்திற்கு ஒத்ததாயில்லை. அனேக கைகளை நான் பார்த்திருக்கிறேன். ஆயுள் ரேகையிலிருந்தோ அதன் சமீபத்திலிருந்தோ ஆரம்பித்துப் புதன் மேட்டுக்குப் போகும் ரேகைகள் சுத்தமாக விருந்தால் நல்ல தேகதிடம், ஊக்கம், தொழிலில் ஜெயம் ஆகியவைகளையுடையவர்களாயிருக்கிறார்கள்.

ஆகையினால் முதலில் சொன்ன ரேகையை ஆரோக்கிய ரேகையென்று சொல்வது பொருத்தமாகும். இந்த ரேகை யுடையவர்கள் அனேகமாகத் திடகாத்திரதேக மற்று மெலிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இந்த ரேகையானது புதன்மேட்டிலிருந்து ஆரம்பித்துக் கீழேபோய் ஆயுள்ரேகையின் எந்தப்பாகத்தில் தொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறதோ அக்காலத்தில் கடுமையான வியாதியைக்குறிக்கும். இந்த ரேகையானது பட்டும் படாமலும் அநேக துண்டுக ளாக விருந்தால் அஜீர்ணத்தைக்குறிக்கும். அலைபோலிருந் தால் கடுமையான பித்தத்தைக் குறிக்கும். ஆரோக்கியரே கையில் தீவு இருந்து புத்திரேகையிலும் தீவு இருந்து இர ண்டும் சம்பந்தப்படுமாயின் க்ஷயரோகத்தைக் குறிக்கும். ஆரோக்கியரேகை இருதய ரேகைக்கும் புத்தி ரேகைக்கும் நடுவே காணப்பட்டால் மூளைக்காய்ச்சலைக் குறிக்கும். ஆ ரோக்கியரேகைக்குச் சமீபமாக ஒரு ரேகை சிலர் கையில் காணப்படலாம். இந்த ரேகையுடையவர்கள் அமித குடிகா ரர்களாகவும், சிற்றின்ப வாஞ்சையுடையவர்களாகவும் இருப் பார்கள்.

---

பதினைன்காவது பிரிவு

# சுக்கிர வளையம்

இந்தரேகையானது உடைந்துமுடையாமலும் காணப் படும். இந்த ரேகையானது முதல் விரலுக்கும் இரண்டா வது விரலுக்கும் நடுவில் ஆரம்பித்து மூன்றாவது நான் காவது விரல்களுக்கிடையில் முடிவடைந்து பாதிவட்டவடி வாகத் தோற்றும். இந்த ரேகை யிருப்பது ஒரு நல்ல குறி யல்ல.

இந்தரேகை உடையாது நன்றாகவிருந்தால் புத்திக்கூர் மையையும் சிற்றின்ப வாஞ்சையையும் குறிக்கும். இந்த ரேகை உடைந்திருக்குமேயானால் ரோசத் தன்மையைக் குறிக்கும். இந்த ரேகை மூன்றாவது நான்காவது விரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கிடையில் முடிவடைவதற்குப் பதிலாகப் புதன்மேட்டுப்பக்கம்போய் விவாகரேகையைத் தொடுமானால் விவாகத்தொந்தரவைக் குறிக்கும். இந்தரேகையின்மேல் நக்ஷத்திரப்புள்ளியிருந்தால் தங்கள் விருப்பம்போல் சிற்றின்பத்தை யனுபவித்து மேகரோகத்தினால் மரணமடைவதைக் குறிக்கும். இந்த ரேகையுடைந்து பெண்கள் கையில் காணப்பட்டால் கர்ப்பவாயு, கர்ப்பவலி, ஆகியவைகளைக் குறிக்கும். இந்த ரேகையுடையவர்கள் புத்திசாதுர்யத்தையும், வன்மையையும் நல்ல வழிகளில் செலுத்துவார்களானால் அவர்கள் அடையும் மேன்மை, கீர்த்தி சொல்லற்பாலதன்று.

பதினைந்தாவது பிரிவு.

## விவாக ரேகை

இந்த ரேகையானது சாய்வாகக் கையின் ஓரத்தில் புதன்மேட்டில் காணப்படும். இந்த ரேகைகளினால் ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் ஒன்றோ பலவோ உள்ள சேர்க்கையைக் குறிப்பிடுமேயன்றி, மத சம்பந்தமாக விவாகம் நடந்ததோ, அல்லது ரிஜிஸ்டர் செய்ததோ, என்று சொல்வது முடியாத காரியம். இந்த ரேகைகளினால் தம்பதிகளுக்கிடையிலுள்ள நேசபான்மை, சக்தி, செல்வப்பெருக்கு, கஷ்டநஷ்டங்கள், ஆகியவற்றை யறியலாம்.

இல்வாழ்வானென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

இந்த ரேகையானது சுத்தமாகவும், ஸ்பஷ்டமாகவும் தனித்த ஆழமான ரேகையாயிருந்தால் நல்ல ஒரு விவாகத்தையும், இரண்டு மூன்றாயிருந்தால் இரண்டு மூன்று விவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தையும் குறிக்கும். ஆனால் முதல் ரேகை நீளத்தில் குறைந்திருந்தாலன்றி, மற்ற ரேகைகளுக்குப் பலனுண்டாவதில்லை. இந்த ரேகையானது முடிவில் இரண்டு கிளைகளாக விருப்பின் விவாகப் பிரிவினையைக் குறிக்கும். இந்த ரேகை வளைந்து கீழ்நோக்கியிருந்தால் வியாதியைக் குறிக்கும். கீழ் நோக்கி வளைந்து இருதயரேகையை வெட்டுமானால் இறந்தலைக் குறிக்கும். இந்த ரேகை உடைந்தோ அல்லது அதன் மேல் தீவு இருந்தாலோ அவர்களுக்கிடையில் சச்சரவையும், சிலசமயம் பிரிவையும் குறிக்கும். இந்த ரேகையில் மயிர்கள்போல் கீழ்நோக்கிய செங்குத்தான ரேகைகளிருந்தால் வியாதியைக் குறிக்கும். நக்ஷத்திர மிருந்தால் திடீரெனக்களஸ்திரத்திற்கு உண்டாகும் மரணத்தைக்குறிக்கும் இந்தரேகை யாரம்பத்தில் தீவுஇருந்தால் நெடுநாள் சென்றபின் விவாகம் செய்வதையும், அல்லது விவாகம் செய்து பிரிந்திருந்து சேர்வதையுங் குறிக்கும். இந்த ரேகை நீண்டு சூரியரேகையைத் தொடுமாயின் நல்ல அதிஷ்டமுள்ள விவாகத்தைக் குறிக்கும். வெட்டுமாயின் பொருட் செலவுகளைக் குறிக்கும். மெல்லிதாய் மேல்நோக்கி வளையுமானல் விவாகமில்லாமையைக் குறிக்கும்.

இந்த ரேகை எவ்வளவு இருதயரேகைக்குச் சமீபத்திலிருக்கிறதோ அவ்வளவு சமீபத்தில் விவாகமென்பதைக் குறிக்கும். சாதாரணமாக இருதயரேகைக்கும் நான்காவது விரல் அடிவரையுமுள்ள தூரத்தை 70 பாகங்களாகப்பிரித்து இந்த ரேகை எந்தப் பாகத்திலிருக்கிறதோ அந்தக் காலத்தில் விவாகம்நடைபெறும் என்றறிந்துகொள்வீர்களாக, விவாகத்தைப்பற்றிப் பார்க்கும்போது இருதயரேகையின் முடிவு, சுக்கிரமேட்டிலுள்ள செல்வாக்குரேகை, சந்திரமேட்டிலுள்ள செல்வாக்குரேகை, இவைகளையும் நன்றாகக் கவனிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறாவது பிரிவு

## குழந்தைகள் ரேகை

இந்த ரேகையானது விவாக ரேகையின்மேல் செங்குத்தாய் சிறிதாகவோ பெரிதாகவோ காணப்படுகிறது. இந்த ரேகை ஸ்திரீகளின் கையில் துலக்கமாகத் தெரியும்.

நீண்ட அகலமான ரேகைகள் ஆண் குழந்தைகளையும் மெல்லியரேகைகள் பெண்குழந்தைகளையும் குறிக்கும். எத்தனை குழந்தைகள் என்பதையும், எந்தெந்தக் காலங்களில் உண்டாகும் என்பதையும் கையின் வெளிப்புறத்திலிருந்து கணக்கிட்டுக் கொள்ளவேண்டியது. இந்த ரேகைகளின் மேல் தீவு அல்லது கறுப்புப் புள்ளிகளிருந்தால் வியாதியையும், கருமையடைந்தால் இறத்தலையுங் குறிக்கும்.

பதினேழாவது பிரிவு

## அருள் ரேகை

இந்த ரேகையானது சந்திர மேட்டிலிருந்து புறப்பக்கமாக வளைந்து புதன் மேட்டுக்குச் செல்லும். இந்த ரேகை மிகவும் அபூர்வமாகத்தான் காணப்படுகிறது. இந்த ரேகையுடையவர்கள் தீர்க்கதரிசிகளாக விருப்பார்கள். உண்மையாக நான் சிலரைத்தான் பார்த்திருக்கிறேன். அவர்கள் இகலோக வெறுப்புடையவர்களாகவே காணப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டாவது பிரிவு

# குரு வளையம்.

இந்த ரேகையானது ஆயுள்ரேகை அடியின்மேல் குருமேட்டில் இளம் பிறைச் சந்திரன்போல் மேற்பக்கமாக வளைந்துகொண்டிருக்கும். இந்த ரேகையுடையவர்கள் வாக்குச் சாதுர்யம், வசீகரணம், மனோவசிய சக்தி, கடவுளால் கொடுக்கப்பட்ட சுய அறிவு, தெய்வீக உணர்ச்சி, மதப் பற்று, காட்சிப்பேறு, இவைகளையுடையவர்களாயிருப்பார்கள். இது உபந்நியாசஞ் செய்பவர்கள், அல்லது அரசாங்க சபைப் பிரதிநிதிகளாக விருப்பமுடையவர்கள், பொது ஸ்தாபனங்களுக்குத் தலைவர்களாகவிருக்க விருப்பமுள்ளவர்கள் ஆகிய இவர்களுக்கு அவசியம் இருக்கவேண்டிய நல்ல குறியாகும். இவர்கள் தங்கள் வசீகரண சக்தியினுலும், வாக்குச் சாதுர்யத்தாலும், உண்மையாலும், எளிதில் மற்றவர்களைத் தங்கள் சொல்லுக்குக் கீழ்ப்படியச் செய்வார்கள்.

---

பத்தொன்பதாவது பிரிவு

# சனி வளையம்

இந்த வளையமானது சனிமேட்டின் கீழ் இளம்பிறைச் சந்திரன்போல் மேற்பக்கமாக வளைந்திருக்கும். இந்த ரேகையுடையவர்கள் இயற்கை யறிவு, ஜோதிஷ சாஸ்திர வாராய்ச்சி, வேதாந்த விசாரம், மானஷசாஸ்திர ஆராய்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவைகளை இயல்பாக வுடையவர்களாகவே யிருப்பார்கள். இந்த ரேகையானது சாதாரணமாக விதிரேகையை வெட்டிக்கொண்டே யிருக்கும். விதிரேகையை வெட்டாதிருப்பின் எதிர்கால சம்பவங்களைக் கூறக்கூடிய சாமார்த்தியமுள்ளவர்களாவார்கள். இந்த வளையமானது தீவுடனிருந்தால் தற்கொலைக்கான எண்ணம் அடிக்கடி தோன்றும். விதிரேகையை வெட்டிக்கொண்டு வளையமிருப்பின் ஜீவியகாலத்தி னந்தியபாகத்தில் கஷ்டநஷ்டங்களைக் குறிக்கும். இது ஒரு நல்ல குறியல்ல.

---

இருபதாவது பிரிவு

## பிரயாண ரேகை.

இந்த ரேகையானது சந்திரமேட்டின் அடிவாரத்தில் காணப்படும். இந்த ரேகையிருந்தால் நிச்சயமாக பிரயாணத்தைக் குறிக்கும். இந்த ரேகையானது விதிரேகையைத் தொடுமாகில் கடல்கடந்த பிரயாணத்தையும் வெளிநாடுகளில் அதிக செல்வாக்கையும் குறிக்கும். இந்த ரேகையில் தீவு இருந்தால் பிரயாணத்தில் கஷ்டநஷ்டங்களைக் குறிக்கும். இந்தப் பிரயாணரேகை மேல்நோக்கியிருந்தால் லாபத்தையும், கீழ்நோக்கியிருந்தால் லாபமில்லாமையையும் குறிக்கும். இதை விட இன்னு மொருவிதமான பிரயாண ரேகை இருக்கிறது, அது ஆயுள்ரேகையிலிருந்து பிரிந்து சந்திரமேட்டுக்குப் போவது. ஆயுள்ரேகை இரண்டாய்ப் பிரிந்து ஒரு கிளை சந்திரமேட்டுக்குப்போனால் ஆயுள் முழுமையும் பிரயாணமாகவே யிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஊரிலும் நிலைத்திருக்கமாட்டார்கள், அலைந்து திரி வார்கள் என்பதைக் குறிக்கும். இந்த விதமான கிளை ரேகையிருப்பது அநேக தேசங்களைச் சுற்றிப்பார்க்க விரும்பும் மக்களுக்கு அநுகூலமாகவிருக்கும்.

இருபத்தோராவது பிரிவு

## கங்கண ரேகை

இந்த ரேகையானது மணிக்கட்டின்மேல் சுற்றிக்கொண்டு மூன்று ரேகைகள் இருக்கும், இந்த ரேகை உடையாமல் நன்றாய் மூன்றுந் தென்பட்டால் ஆரோக்கியம், தீர்க்காயுள், சந்தோஷம் ஆகியவைகளைக் குறிக்கும், முதல் கங்கணரேகை (ஆற்ச் போல்) ஏறிய மாதிரி தென்பட்டால் சலரோகம் முதலிய மர்மவியாதி யிருக்கும் என்பதைக் குறிக்கும், உடைந்திருந்தால் அவ்வளவு நல்லதல்ல,

இருபத்திரண்டாவது பிரிவு

## உடுக்கை ரேகை

இந்த் ரேகையானது புத்திரேகைக்கும் இருதயரேகைக்கும் நடுவில் உடுக்கைப்போலிருப்பது, இது இரண்டு வகைப்படும். ஒன்று விதிரேகையை இருதயரேகையின் கிளை வந்து வெட்டுவது, மற்றது இரண்டு ரேகைகளால் உண்டாக்கப்பட்டுத் தனித்திருப்பது. இந்த ரேகை கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருப்பது ஒரு நல்ல அதிஷ்டமாகும். இந்த ரேகை கையில் கண்டால் பின்வருவனவற்றை முன்னறிதல், மதப் பற்று, சாந்தம், ஈஸ்வரபக்தி, ஜோதிடம் முதலிய இரகசிய சாஸ்திர ஆராய்ச்சி, வாழ்வில் ஜெயம் ஆகிய இவைகளைக் குறிக்கும். ஜோதிஷம், ரேகை சாஸ்திரம் முதலியவற்றி லிருந்து பிரவிர்த்தி செய்பவர்களுக்கு இது நல்ல குறியா கும்,

---

## இருபத்திமூன்றுவது பிரிவு

# கிரகமேட்டு ரேகைகள்.

கிரகமேடுகளில் ரேகைகள் தோன்றும் என 8-வது பிரிவில் கூறியிருக்கிறேன். இந்த ரேகைகளைக் கணக்கிடு வது முடியாத காரியம், ஆனாலும் இந்த ரேகைகளைக் கவ னித்தே தீரவேண்டும். எந்த மேடுகளில் ஆனாலும் ரேகை கள் ஆரம்பித்து கிரகமேட்டை வெட்டாது நேராயிருப்பின் அந்த மேட்டின் குணத்திற்கு நன்மையையும், கிரகமேட் டை வெட்டினால் அக்கிரகமேட்டின் குணங்களைக் கெடுத் தலையுங் குறிக்கும்.

இந்தக் கிரகமேட்டு ரேகைகள் சென்று எந்த ரேகை யை வெட்டுகிறதோ அந்த ரேகையின் பலன் குறைதலையும் வெட்டாது அத்துடன்சேர்ந்து போகுமேயானால் அந்தரே கையின் குணத்திற்கு நன்மையையுங் கொடுக்குமென்பதைக் குறிக்கும். உதாரணமாக சுக்கிரமேட்டில்ரேகைகள் ஆரம்பி த்து ஆயுள் ரேகையை வெட்டாது கூடப்போகுமானால் ஆயுளுக்குப் பலத்தையும், வெட்டுமானால் தொழில் நஷ்டத் தையும், சூரிய ரேகையை வெட்டுமானால் பொருள் செல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையும், விவாக ரேகையை வெட்டுமானல் தம்பதிகளின் பிரிவையும், புத்திரேகையை வெட்டுமானல் மனத்தொந்தா வையும், இருதயரேகையை வெட்டுமானல் நேசத்தொந் தரவையும், சந்திரமேட்டுக்குப் போகுமானல் பிரயாண ஆவலையும், செவ்வாய் மேட்டுக்குப் போகுமானல் பகையையும், புதமேட்டுக்குப் போனல் தொழில் விர்த்தி யையும் சூரியமேட்டுக்குப் போனல் கீர்த்தியையும் ஆக அந்தந்த மேடுகளின் பலன்களைக்கொடுக்கு மென்பதைக் குறிக்கும். சந்திரமேட்டுரேகை விதிரேகையை வெட்டுமா னல் செல்வாக்குக் குறைதலையும், வெட்டாமல் சேருமா னல் அதிக செல்வாக்கையுங் குறிக்கும். இந்த ரேகைகளைக் கவனிக்கும்போது ஆரம்பத்தையும், முடிவையும் கவனிக்க வேண்டும்.

## மேடுகளிலுள்ள நக்ஷத்திரப் புள்ளி யடையாளங்கள்.

இந்த ரேகைகள் எப்பொழுதும் மற்ற ரேகைகளினுல் உண்டாக்கப்படாத. பிரகாசமாகவும், சுத்தமாகவும் இரு க்கவேண்டும். இருந்தால் தான் அந்தந்தக் குறிகளின் பலன்களைக் கொடுக்கும். இந்த அடையாளங்களை 10-வது படத்தைக் கவனித்து அறிந்துகொள்ளவும்.

### 1. நட்சத்திரம்

குரு மேட்டிலிருந்தால் அதிஷ்டத்தையும், சனி மேட் டிலிருந்தால் அபாயத்தையும் சூரியமேட்டிலிருந்தால் திர வியத்தையும் புதமேட்டிலிருந்தால் பொய்யையும், செவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மேட்டிலிருந்தால் சண்டையையும், சந்திரமேட்டிலிருந்தால் துக்க சுபாவத்தையும், சுக்கிர மேட்டிலிருந்தால் நேசர்களின் தீங்கையும் குறிக்கும்.

## 2. தீவு

இந்த அடையாளம் எந்தமேட்டில் காணப்பட்டாலும் அந்த மேட்டின் பலன்களைக் கெடுக்குமென்பதைக் குறிக்கும்.

## 3. குற்றடையாளம்

இந்த அடையாளம் எந்த ரேகையில் எந்த மேட்டில் காணப்பட்டாலும் அவைகளுக்குரிய பலன்களைக் கெடுக்குமென்பதைக் குறிக்கும்.

## 4 சிலுவைபோன்ற குறி

இந்த அடையாளம் எந்த மேட்டில் எந்த ரேகையில் காணப்பட்டாலும் அவைகளின் பலன்களைக்கெடுக்குமென்பதைக் குறிக்கும்.

## 5 முக்கோணக்குறி

இந்த அடையாளம் எந்த மேட்டிலிருந்தாலும் அந்த மேட்டின் நன்மையை அதிகப்படுத்தலைக் குறிக்கும்.

## 6. வலைபோன்ற ரேகை

இந்த அடையாளம் எந்த மேட்டிலிருந்தாலும் அந்த மேட்டின் பலனைக் கெடுக்குமென்பதைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. சதுரம்

இந்த அடையாளம் எந்த மேட்டில் எந்த ரேகையில் இருந்தாலும் அவைகளின் குண வித்தியாசங்களால் ஏற்படும் ஆபத்திலிருந்து காப்பாற்றும் நல்ல குறியாகும்.

## 8. வட்டக்குறி

இந்த அடையாளக்குறி சூரியமேட்டைத் தவிர எந்த மேட்டில் காணப்பட்டாலும் தீமையைக் கொடுக்கும் ஒரு கெட்ட குறியாகும்.

## 9. சூலக்குறி

இந்த அடையாளக்குறி எந்த மேட்டில் எந்த ரேகையில் காணப்பட்டாலும் அவைகளினுடைய பலன்களின் காரியசித்திக்கு ஒரு நல்ல குறியாகும்.

---

## விரல்களில் காணப்படும் அடையாளங்கள்

10-வது படத்திற்காட்டிய அடையாளங்களும் ரேகைகளும், விரல்களிலும் தோன்றும். விரல்களிலுள்ள ரேகைகள் நேராகவிருப்பின் அந்தந்தமேட்டு விரல்களுக்குரிய காரியசித்தியையும், குறுக்குரேகைகள் அவைகளுக்குரிய கெட்ட பலனையுங்கொடுக்குமென்பதைக் குறிக்கும். 10-வது படத்திற் காட்டிய குறிகள் காணப்படின் நல்ல குறிகள் அவைகள் காரியசித்தியையும், கெட்ட குறிகள் பாதகத்தையும் கொடுக்குமென்பதைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபத்திநான்காவது பிரிவு

# கையிலுள்ள முக்கோணமும் சதுரமும்

இவைகளைப்பற்றி அறிவது குணகுணங்களை நிர்ணயிக்கும்போது மிகவும் உதவியாகவிருக்கும். இவற்றினிடங்களை 8-வது படத்தைப்பார்த்து அறிந்துகொள்ளவும்.

### முக்கோணம்

ஆயுள்ரேகை, புத்திரேகை, ஆரோக்கியரேகைகளால் உண்டாக்கப்பட்ட நடுப்பாகத்திற்கு முக்கோணம் என்று பெயர். இந்த முக்கோணம் விசாலமாகவும், நன்ருகவும் இருக்குமானல் விசாலபுத்தி, பரோபகாரம், அனுகூலம், இரக்கம், ஆரோக்கியம், தேசத்தொண்டு ஆகியவைகளைக் குறிக்கும். இந்த முக்கோணம் சிறிதாகவும், பின்னப்பட்டுமிருந்தால் அல்பபுத்தி, தைரியமின்மை, பயம் ஆகியவைகளைக் குறிக்கும்.

### சதுரம்

இருதயரேகைக்குக் கீழும், புத்திரேகைக்கு மேலும் நடுவிலுள்ள பாகத்திற்கு சதுரம் என்று பெயர். இந்தச் சதுரமானது விசாலமாகவும், இருதயரேகையின் கிளை முதலிய சிறு குறுக்கு ரேகைகளால் வெட்டப்படாது நன்ருகவுமிருப்பின் புத்திக்கூர்மை, மனவடக்கம், சந்தோஷம், ஊக்கம் ஆகியவைகளைக் குறிக்கும். இந்த இடமானது சிறிதாகவோ, நன்ருக அமையாமலோ விருப்பின் பேராசை, பொருமை, ஒழுக்கமில்லாமை ஆகியவைகளைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்தாவது பிரிவு

# கிரகாதிகளின் தோற்றங்கள்

மானிட ஜன்மமானது பூர்வ ஜன்மாந்திரத்தில் செய்வினைக்கீடாகக் கிரகாதிகளின் ஆதிக்கத்துட்பட்டு இப்பூவுலகில் வாழ்கின்றனர். ஒவ்வொரு நொடிப்பொழுதும் சம்பவிக்கும் சுகம், துக்கம், கஷ்டநஷ்டம், சந்தோஷம் இவையெல்லாம் கிரகங்களின் வழிப்பட்டதேயாகும். உதாரணமாக ஒவ்வொரு கிழமைகளிலும் நீங்கள் வித்தியாசத்தைக் காணலாம். அதாவது ஒரே பிரமாணமுள்ள பேதிமாத்திரையைப் புதன்கிழமையிற் சாப்பிட்டால் சற்றுக்குறைவாகவும் வியாழக்கிழமையில் சாப்பிட்டால் சற்றுக்கூடுதலாகவும் விரேசனமாகும். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து நாம் கிரகாதிகளின் சூத்திரப்பாவை போலிருக்கின்றோம். வியாழன், சனி, சூரியன், புதன், செவ்வாய், சந்திரன், சுக்கிரன் முதலிய கிரகங்களில் எந்தக் கிரகம் நம்மை அதிகம் ஆளுகின்றது என்பதைக் கீழ்க்காணும் விஷயங்களால் நன்கறியலாம்.

## வியாழன்

வியாழனுடைய நல்ல ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் சமமான உயரமும், இடகாத்திரமும் சிவந்த வசீகரமான முகமும், பெரிய கண்களும், சுருண்டு தடித்த செம்பட்டை மயிர்களும், வெண்மையான அழகிய பற்களும், அகண்ட மார்பும், அழகிய வாயும் உடையவர்களாக விருப்பார்கள். இவர்கள் எப்பொழுதும் பேசும்போது உண்மையாகவும், அன்பாகவும், சுத்தமாகவும், பேசுவார்கள். வியாதிகள் இவர்களை அதிகம் பீடிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி.

சனிக்கிரகத்தின் நல்ல ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நடுத்தரமான உயரமும், மெலிந்ததேகமும், சிறிய கண்களும், கருமையான தடித்த மயிரும், நீண்ட மூக்கும், மங்கலான அழகில்லாத பற்களுடையவர்களுமாகவிருப்பார்கள் இவர்கள் எப்பொழுதும் பேசும்பொழுது சந்தேகத்துடனும், தமதுகொள்கையிலிருந்து மாறுமலும், தந்திரமாகப் பேசுவார்கள். இவர்களிடம் ஏதாவதொரு நோய் இருந்து கொண்டே யிருக்கும்.

## சூரியன்

சூரியனுடைய நல்ல ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நியாயமான உயரமும், அழகுள்ள சரீரமும், ஒளிபொருந்திய கண்களும் மிருதுவான நீண்ட மயிர்களும், வசீகரத்தோற்றமுமுடையவர்களாக விருப்பார்கள் இவர்கள் எப்பொழுதும் பேசும்பொழுது ஜாக்கிரதையாகவும், அமைதியாகவும், இனிமையாகவும் பேசுவார்கள்.

## புதன்

புதனுடைய நல்ல ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நடுத்தரமான தேகமும், விசாலமான நெற்றியும் நிறைந்த முகமும் நீண்டவாயும் செம்பட்டை மயிரும் மங்கலான கண்களும் உடையவர்களாக விருப்பார்கள். இவர்கள் பேசும்பொழுது மென்மையான சத்தத்தோடு வாக்குச் சாதுரியமாக எவற்றைடம் நன்ருக ஆலோசித்துப் பேசுவார்கள்.

## செவ்வாய்

செவ்வாயின் நல்ல ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நடுத்தரமான உயரமும், நல்ல திடகாத்திரமான தேகமும், விசாலமான ஒளிபொருந்திய சிவந்த கண்களும், அகண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பும், குறுகிய விசாலமான கழுத்தும், அகண்ட புஜமும், சிவந்த முகமும் உடையவர்களாக விருப்பார்கள். இவர்கள் பேசும்பொழுது தைரியமாகவும், சீக்கிரமாகவும் பேசுவார்கள்.

### சந்திரன்

சந்திரனுடைய நல்ல ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் உயரமான தோற்றமும், வட்டமான தலையும், பெரிதாகிய கண்களும், ஸ்தூலதேகமு முடையவர்களாக விருப்பார்கள். பேசும்போது இவர்கள் வர்ணனையாகவும், சாதுரியமாகவும், மெதுவாகவும், அன்பாகவும் பேசுவார்கள்.

### சுக்கிரன்

சுக்கிரனுடைய நல்லஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நடுத்தரமான தேகமும், அழகிய முகமும், பெரியஒளி பொருந்திய கண்களும், வடிவான சிறிய நாசியும், சிறிய வாயும், வெண்மையுள்ள வரிசையான பற்களும், சிறிய காதும், வசீகரத் தோற்றமு முடையவர்களாக விருப்பார்கள். இவர்கள் பேசும்போது இனிமையாகவும், உற்சாகமாகவும், நம்பிக்கையாகவும், சினேகம் பாராட்டியும் பேசுவார்கள்.

---

## ஆராய்ச்சியும்—அனுபவமும்.

நான் ஒருபோதும் ரேகாசாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்வேனென்ன நினைத்திருக்கவில்லை. எனது இளம்பராயத்தில், சிலர் கைகளை நீட்டச் சொல்லி மனம் போனபோக்காய் தமாஸாக ஏதாவது சொல்வதுண்டு. சிலர் உண்மையாக விருக்கிறதென்று கூறி மகிழ்வதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாளிலுள்ள இளம்பராயத் தமாஸானது சில ஆண்டு களுக்கு முன்னே ரேகாசாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற பேரவாவாக எழுந்தது. அதுநாள் முதல் அகப்பட்ட ரேகாசாஸ்திரங்களை வாங்கி வாசித்தேன். சில ரேகாசாஸ்திரிகளிடம் சென்று அவர்கள் மூலமாகச் சிலவிஷயங்களையும் சில புஸ்தகங்களையும் கற்றேன். அதன் றியும் தென்படுகிற ரேகாசாஸ்திரிகளை அழைத்துத் தர்க் கித்துத் தர்க்கமூலமாகச் சிலவிஷயங்களையும் அறிந்தேன். ஆனல் தர்க்கசமயத்தில் சிலர் இவற்றையெல்லாம் அநுபவ மூலமாக அறியலாமன்றித்தர்க்கமூலமாக அறிவது அசாத் தியமெனக் கூறுவதுண்டு. ஆதலினுல் பல ஆபீசுகள், ஆஸ் பத்திரிகள், வியாபாரஸ்தலங்கள் முதலிய பல இடங்க ளுக்குஞ்சென்று கைப்படங்களெடுத்து அநுபவத்துக்குக் கொண்டு வந்தேன்.

உதாரணமாக: அநுபவம் வாய்ந்த சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

1. கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்குக் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்பொழுது எனது வகுப்பிலிருந்த சிலர் கைகளைப் பரீக்ஷித்துக் கொண்டிருந் தேன். அதைக் கண்ணுற்ற முதல் வகுப்பில் பிரயாணஞ் செய்த சீனரொருவர் வந்து தமது கையை நீட்டி அதிஷ் டத்தை யாராயும்படி தெரிவித்தார். அவருடைய வயதைக் கேட்டறிந்து கொண்டு கையைக் கவனித்துத் தெரிவித்த தாவது: "கையானது மிருதுவாகத் தத்துவஞான வகுப் பைச் சேர்ந்ததாயும் புதன்மேட்டில் மூன்று நான்கு சிறு ரேகைகளும் விதிரேகையானது சந்திர மேட்டிலிருந்து ஆரம்பித்தும், சூரியரேகை 28-வது வயதில் ஆரம்பித்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவளையமும், நல்ல ஆயுள் ரேகையும், விவாகரேகை 28-வது வயதிற்குச் சமீபமாக விருத்தலினலும் உமக்கு நல்ல சுகசீவியமும், கீர்த்தியும் நிறைந்த ஆயுளுண்டு. அறிவை விரும்புவீர், பணத்தை லக்ஷியம் செய்வீர், வைத்தியத்தொழிலை மேற்கொள்வீர். 28-வது வயதில் விவாகமும் அதிலிருந்து கீர்த்தியும் ஜயமும் மனம்போல் வாழ்வுமுண்டெனக் கூறினேன். சினர் "நீங்கள் சொன்னதெல்லாம் வாஸ்தவமே, ஆனல் விவாக விஷயத்தில் மாத்திரம் சந்தேகமிருக்கிறது, நான் இப்பொழுது பிரான்ஸிலிருந்து மெடிசினைப் பற்றிப் படித்துவிட்டு ஊருக்குப் போகிறேன். எனக்குப் பணத்தில் ஆசையில்லை. நான் புத்தமதம், நான் ஒரு பெரிய மேதாவியாய் வரவேண்டுமென்பதே எனது ஆசை. விவாகம் செய்வதில் விருப்பமில்லை, எனக்கு வயது 27. என்றுந் தெரிவித்தார். நான் உடனே 28-வது வயதில் ஒரு பெண்ணினுடைய சேர்க்கை நிச்சயமாக ஏற்படுமென்றும், அதிலிருந்து கீர்த்தியும் மனம்போல் வாழ்வும் படிப்படியாய் வருமென்றும் தெரிவித்தேன். ஆனல் சேர்க்கை றெஜிஸ்றேஷன் மூலமாகவோ மதசம்பந்தமாகவோ நடக்குமென்பதை நிச்சயித்துக் கூறமுடியாதென்றேன், அவர் உடனே தாம் அடிக்கடி கடிதம் எழுதுவதாக வாக்களித்துச் சிநேகமுறையில் சென்றார். பின்பு அவருக்கும் எனக்கும் அடிக்கடி கடிதப் போக்குவரவு நடந்தது. சில மாதங்கள் சென்றபின் ஒரு கடிதத்தில் விவாகப்பேச்சு நிகழ்ந்துகொண்டிருக்கிறதென்று தெரிவித்தார். மறுகடிதத்தில் விவாகம் செய்துவிட்டதாகவும், வைத்தியசாலை வைத்துக்கொண்டிருக்கப் போகிறதாகவும், தான் சில சங்கங்களுக்குத் தலைவராக விருக்கிறதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நண்பரொருவர் யான் முன்பின் அறியாத ஒரு வரை அழைத்து வந்து இவர் அதிஷ்டம் எப்படி என்று சொல்லுங்கள் என்று அவர் கையை நீட்டச்செய்தார். அவரின் வயதைக் கேட்டறிந்துகொண்டு கவனித்தேன். அவருக்கு அக்காலத்தில் விதிரேகையில் ஓர் அலைவு காணப்பட்டது. ஆகையால் அவருக்கு உத்தியோகத்தில் ஏதாவது தொந்தரவு இருக்கவேண்டுமெனத் தீர்மானித்து மற்ற ரேகைகளையுங் கவனித்துத் தெரிவித்தேன். "உங்களுக்கு உத்தியோகத்தில் தற்சமயம் தொந்தரவு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அதே உத்தியோகத்தில் 56-வது வயது வரையுமிருப்பீர் என்றும் தெரிவித்தேன். அவர் வாஸ்தவம், தற்பொழுது முதல் ஆபீசருக்கும் எனக்கும் சில தொந்தரவுகளினால் வேலையிலிருந்து விலகியிருக்கிறேன். எனக்குத் திரும்ப அந்த உத்தியோகங் கிடைக்குமோ என்பது சந்தேகம். பல சோதிடர்களும் கிடைக்காதென்றே தெரிவித்திருக்கின்றார்கள் என்றார். நான் வேலை கிடைப்பது எப்படியும் நிச்சயம். மனுப்பண்ணுமென்றேன். மேலே மனுப்பண்ணினார். வேலை கிடைத்தது.

3. சிங்கப்பூரில் தங்கியிருந்தபொழுது கொன்ட்ரூக்டர் ஒருவர் வந்து தமது கையை நீட்டி எனது நிகழ்கால சம்பவங்களைக்கொஞ்சம் கவனியுங்கள் என்றார். வயதைக் கேட்டறிந்துகொண்டு கவனித்தேன். அதே வயதில் விதிரேகையைச்செவ்வாய் மேட்டிலிருந்து ஒரு ரேகை வெட்டிச் சூரியரேகையிலும் தீவு காணப்பட்டது. இதே வயதில் உம்முடைய தொழிலுக்குப் பகைவர்களினால் தொந்தரவு ஏற்பட்டுக் கோர்ட்டு விவகாரத்தில இருக்கவேண்டுமென்றும், அதனால் உமக்குக் கெட்ட பேரும் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஷ்டமும் ஏற்படுமென்றும் தெரிவித்தேன். அவர் வாஸ்தவம் கொடுக்கல் வாங்கல் தொந்தரவினால் கோர்ட்டு விவகாரம் நடந்துகொண்டிருக்கிறது. அதன் முடிவைத்தான் எதிர்பார்க்கிறேன். என்றார். நான் தெரிவித்தபடி சில மாசங்களில் கேஸில் அபஜயமடைந்து கொடுக்கவேண்டிய பணங்கள் கொடுக்கமுடியாது பாங்கிறப்ற் கொடுத்துவிட்டார்.

4. நான் ஒருமுறை சென்னையிலிருந்தபொழுது காபி ஹோட்டல் முதலாளி ஒருவர் வந்து தமது கையை நீட்டி அதிஷ்டத்தை யாராயும்படி தெரிவித்தார். விதிரேகையானது 38-வது வயதில் மெலிந்து நிற்க அதே காலத்தில் சமீபமாக வேறொரு தடித்தரேகை புறப்பட்டுச் சென்றது. ஆகையால் வியாபாரத்தில் மாற்றமுண்டு. இவ்வியாபாரத்தில் நஷ்டம் நடந்து வருகிறது. வேறு வியாபாரம் ஆரம்பிக்கும்படி தெரிவித்தேன். அவர் அது ஆகாத காரியம் என்றும் மாற்றுவதென்றால் ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டமடையும் என்றும் சொன்னார். அப்படியாயின் காப்பி ஹோட்டலுடன் வேறு வியாபாரம் செய்யும்படி ஊக்கப்படுத்தினேன். அவர் உடனே கண்ணாடி அல்மாரா ஒன்றை வாசலில் வைத்து அதில் சுதேசிச் சாமான்களையும் விற்பனைக்கு வைத்துக் காப்பி, இட்டலி, தோசை, சாப்பாடு குறைந்த சார்ஜுக்குக் கொடுப்பதாகத் தேதியையுங் குறிப்பிட்டுப் பகிரங்கப்படுத்தி ஓர் விசேஷ கொண்டாட்டம் நடத்தினர். மறுநாளே படிப்படியாய் வியாபாரம் பெருத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இந்தியாவில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் பொழுது திருவையாற்றில் செட்டியார் ஒருவர் வந்து தமது கையை நீட்டி அதிஷ்டத்தைக் கவனிக்கும்படி சொன்னார். கவனித்தபொழுது விதிரேகை சிறுசிறு துண்டுகளாக உடைந்தும், ஆனால் தொடர்ச்சியாயும், சூரிய ரேகை தங்குதடையின்றி சூரியமேட்டுக்குப் போயும் புதன்மேடு உப்பலாயும், சுண்டுவிரல் சிறிது வளைந்துமிருந்தது. ஆதலினால், உம்முடைய முயற்சியில் அடிக்கடி மாற்றமுண்டு. ஆனால் தனவிரயமில்லை. எந்த விஷயத்திலும் துணிவாகப் பிரவேசிப்பீர். அகப்பட மாட்டீர் என்றேன். முழுவதும் வாஸ்தவமேயென்றார்.

6. ஒருசமயத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஒருவர் வந்து தமது கையை நீட்டி நமது அதிஷ்டத்தைக் கொஞ்சம் கவனியுங்கள் என்றார். விதிரேகை நாற்பதாவது வயதில் மெலிந்து நின்று சொற்ப காலங்கழித்து ஆரம்பித்து வளர்ச்சியடைவதினால் இப்பொழுது உள்ள தொழில் நாற்பதில் நின்று சொற்பகாலங் கழித்து வேறு தொழில் செய்து அதிஷ்டமடைவீர், என்றேன். வாஸ்தவம் கடை சரியாய்நடக்காததினால் நிறுத்திவிடலாமாவென்று ஆலோசிப்பதற்காகவே வந்ததாகத் தெரிவித்தார். சில மாதங்களில் கடையை நிறுத்திவிட்டார்.

7. சில வருடங்களுக்கு முன்னதாக ஒருவர் வந்து தமது கையை நீட்டி, வருங்காலபலனை ஆராயும்படி வேண்டிக்கொண்டார். வயதைக் கேட்டறிந்து கொண்டு தெரிவித்ததாவது: உமக்குக் குறுகிய விரல்களோடு குறுகிய நகங்களுமிருத்தலினால் விஷயாவிஷயங்களைப்பகுத்தறியும் சக்தி போதாது. எவ்விஷயத்தையும் பொதுவாகக் கவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிப்பீர். உம்மிடத்தில் கற்பனுசக்தியில்லை. எவ்விஷயத்திலும் சீக்கிரமுடிவும், சீக்கிரபுத்தியு மிருக்கிறது. அதற்கு ஆதாரமாகவே பெருவிரல் முதலாவது அங்குலாஸ்திதி சிறிது நீண்டும் இரண்டாவது அங்குலாஸ்திதி ஒடுங்காது நிமிர்ந்தும் புத்திரேகை குறுகிச் செவ்வாய் மேட்டிற்குச் சென்றுமிருத்தலினுல் முந்தின பலன்களை நிச்சயப்படுத்துவதுடன், நிச்சய புத்தியில்லாமையையும், சுயநலத்தையும், மனம்போன போக்கின்படி நடத்தலையுங் காட்டுகிறது. அத்துடன் விதிரேகை 28-வது வயதில் முடிவடைதலினுல் அவ்வயது முதல் உமக்கு இப்பொழுதுள்ள அனுசரணையும் ஆதரவும் அற்றுப்போகும் ஆதலினுல் நீர் அக்காலமுதல் பிரயாசையடையவும் சங்கடப்படவும் நேரிடும் காரியசித்தியடைவது அபூர்வம் கீழ்ப்படிதலான குணம் பதட்டமின்மை மௌனஞ் சாதித்தல் ஆகியவற்றைக் கையாளவேண்டும். சீக்கிரபேச்சை நிறுத்தவேண்டும் என்று எச்சரிக்கை செய்தேன் அதற்குப்பதிலுத்தரமாக, நானுமொரு ஜோதிடன்தான். எனக்கு அக்காலமுதலே நல்ல காலம் வருகிறது என ஆர்ப்பரித்தார். மௌனஞ் சாதித்துவிட்டேன். 28-வது வயதும் சமீபத்தில் வந்தது. அவருடைய ஆதரவுகளும் குறைந்தன அவர் சில சிறு விஷயங்களில் பிரவேசித்தார், அவற்றிற்கு உலகத்தவரின் எதிர்ப்பு நேர்ந்தது, அவர் பல கஷ்டங்களுக்குள்ளாகி அபஜயத்துடன் இருந்த இடந்தெரியாது ஓடிவிட்டார்.

படிக்கும் நண்பர்களுக்கு இவற்றை யெல்லாம் உதாரணமாகத்தெரிவித்தேன். ஆதலினுல் இப்புஸ்தகத்தையாதாரமாகக் கொண்டு இவைபோன்ற விஷயங்களையும் உங்களுடைய குணகுணங்களையும் கஷ்டநஷ்டங்களையு மறிந்து எல்லாம் வல்ல இறைவனருளால் வாழ்வில் ஜயமடைவீர்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை.

இச்சிறு புஸ்தகமானது கைரேகை சாஸ்திரத்தின் சுருக்கமாகவே யிருக்கிறது, இந்தப்பெரிய ரேகாசாஸ்திரத்தை அநேக நாட்கள் எழுதினாலும் காலம் போதாது. இச்சாஸ்திரத்தின் உண்மையைத் தெரிவித்தற்குச் சுருக்கமாகவும், விரிவாகவும் இப்புஸ்தகத்தை எழுதியிருக்கிறேன், இச்சாஸ்திரத்தில் நம்பிக்கையில்லாமை கடவுளில் நம்பிக்கையில்லாமையாகும், இச்சாத்திரத்தை ஒரேமுறையில் வாசித்தறிய முடியாது, திரும்பத் திரும்ப வாசிப்பதினால் முன்பு கவனிக்கத் தவறிய விஷயங்கள் நன்கு புலப்படும், ஆகையால் இப்புஸ்தகத்தை ஆராய்ச்சியோடும், பொறுமையோடும், ஊக்கத்தோடும் வாசித்தறியவேண்டும், வாசித்துத்தனது கையையோ, மற்றவர் கையையோ பார்க்கும்போது கிரமமாகக் கையின் பிரிவு, விரல்கள், நகங்கள், முடிச்சுகள், கிரகமேடுகள், ரேகைகள் முதலியவற்றைப் பார்த்தறிய வேண்டும், ஏதாவது கெட்ட குணங்கள் கஷ்டநஷ்டங்கள் காணப்படில் அவற்றினின்று தப்புவதற்கு வழிதேடவேண்டும். சாஸ்திரந்தெரியாததினால் பிழையென்று சொல்லக்கூடாது என்பது எனது கோரிக்கை. இப்புஸ்தகத்திலிருந்து அநேக விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு வாழ்வில்வெற்றிபெறுவீர்களென உண்மையாக நம்புகிறேன்

முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka Book Depot

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்[illegible]பண்ணை.

ஐயன்[illegible]ர்!

யாழ்ப்பாண[illegible] - வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு[illegible] பக்கமாக விருக்கும் ஸ்ரீ லங்கா [illegible]த்தகசாலையில்[illegible]ரிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கி[illegible], புத்தகங்களை, ஆசிரிய[illegible] ப[illegible]லவண்[illegible]ந, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்[illegible], இதிகாச, புராண நூல்களும், வேறு இலக்கைக்[illegible]ிய [illegible]திப்புகளும் பென்சில், பேனு முதலியன [illegible]ராப்பி (Ex. Copy) கணக்குப் புஸ்தகங்கள், [illegible]கையாகவு[illegible] சில்லறையாகவும் பெற்றுக்[illegible]ள்ளலாம். வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் [illegible] [illegible]சலுகை செய்யப்படும்.

அதிபர் ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

---

[illegible]காசிவாசி செந்திநாதையரவர்கள் அருளிய "கந்தபுராண நவ[illegible]தம்"
விலை[illegible] [illegible] ரூ. 1.

சி. சிவசம்பு நாதையர்,
ஏழாலை, சுன்னாகம் போ[illegible]ட்.
யாழ்ப்பாணம்.

---

[illegible]சாஸ்திர லகுபோதம்—சதம் 50.
[illegible]மா[illegible] [illegible]யாக்கையின் வேட்கை (அல்லது) [illegible] [illegible]மை நிலைப்போதம்—சதம் 10.
எமாிடத்திலும் ஸ்ரீலங்கா புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

உ[illegible] விலாசம்:-

[illegible]. சண்முகநாத சர்மா,
செ[illegible]ம்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org